# தொண்டன்

ஆரம்பம் - 1969



செப்டம்பர் - 2004

12/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

செப்டம்பர் - 2004

மலர் - 36 இதழ் - 05

ஆசிரியர்
*J.A.G. இரட்ணகுமார்*

இணை ஆசிரியர்
*மலர்வேந்தன்*

துணை ஆசிரியர்கள்
*மெற்றில்டா இராஜேந்திரம்*
*செல்லத்துரை ஜெயராஜா*
*பெஸ்லீயோ வாஸ்*

வெளியீடு
*சமூகத் தொடர்பு நிலையம்,*
*திரு/ மட். மறை மாவட்டம்*

முகவரி
*சமூகத் தொடர்பு நிலையம்*
*அ.பெ.எண் - 44*
*மட்டக்களப்பு*

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 12/=
ஆண்டு சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா : 100/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே




| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு - | 01 |
| மனசே... மனசே... - | 02 |
| இலக்கிய மஞ்சரி - | 04 |
| நாவினால் சுட்ட வடு - | 05 |
| சமாதானக்கனவு - | 06 |
| மறை அறிவை வளர்ப்போம் - | 09 |
| எமை எண்ணிப்பார்ப்போம் - | 10 |
| பழசும் புதுசும் - | 11 |
| ஆரோக்கிய வாழ்வுக்கு - | 12 |
| தொண்டனின் சில நிமிடங்கள் - | 13 |
| நோய் பூரணமாகக்குணமாயிற்று - | 14 |
| இளையவர்களைப் புரிந்து - | 15 |
| தமிழ்மொழிக்கு - | 16 |
| மாற்ற வேண்டும் - | 17 |
| எளிமையான இயற்கை - | 18 |
| வெற்றியின் சின்னம் - | 19 |
| மாணவர் பக்கம் - | 20 |
| தாய் சொல்லை - | 21 |
| நல்வாழ்வுக்கு - | 22 |
| விவிலியம் கற்போம் - | 23 |
| அறிவை வளர்ப்போம் - | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புடன் உங்களோடு...

# சிலுவையும் தலைமைத்துவங்களும்

போர் ஓய்ந்தது! பாதைகள் திறந்தன!

இனி என்ன சமாதானந்தான் என்று மகிழ்ந்திருந்த மக்கள் மனங்களில் மீண்டும் சிலுவைச் சுமைகள். புதிதாகத் தோன்றும் தடைமுகாம்கள், சோதனைகள், சுற்றி வளைப்புக்கள், தரையிலும் கடலிலும் ஆங்காங்கே கேட்கும் துப்பாக்கிச் சத்தங்கள், ஈவிரக்கமற்ற மனிதப் படுகொலைகள், மதக்கலவரங்கள்.

நாளும் சமாதானம் தொடுவானமாகி தூரவிலகிச் செல்வதை உணர முடிகிறது. நிலையான தீர்வற்ற - சண்டையில்லாத சமாதானம் நிரந்தரமன்று. அது நெருப்புக்கு மேலே கயிற்றில் நடப்பது போன்ற கடினமான பணி. கரணந் தப்பினால் மரணந்தான்!

இந்தச் சுமைகள் போதாதென்று நாளும் பொழுதும் அதல பாதாளத்துக்குள் அமிழ்ந்து போகும் நாட்டின் பொருளாதாரமும், மூச்சு முட்டச் செய்யும் பாவனைப் பொருட்களின் விலையேற்றமும் "பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல்" மக்கள் மீது மீண்டும் மீண்டும் சிலுவைகளாய் விழுகின்றன.

அதிகார போதையும், பதவி ஆசையும் உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு தலைமைகளின் மனங்களைக் கடினப்படுத்தியுள்ளன: ஆனால் சுமப்பவர்கள் மக்களல்லவா?

செப்டம்பர் மாதத்தில் திருச்சிலுவைத் திருநாளைக் கத்தோலிக்க திருச்சபைக் கொண்டாடுகிறது. சிலுவைக்கு விழா! ஏனென்றால் அது மக்களின் சுமையைக் குறைத்த சிலுவை: மக்களுக்காகச் சிலுவை சுமந்த தலைவனாம் இயேசுவின் சிலுவை. ஆனால், இன்று மக்கள் மேல் சிலுவை சுமத்தும் - மக்களுக்கே சிலுவையாகக் கனக்கும் தலைமைத்துவங்கள்!! அன்று பலருக்காக ஒருவர் சிலுவை சுமந்தார்: பிறந்தது விடுதலை.

இன்று சிலரது சுயநலத்துக்காக, பதவி, இன வெறிகளுக்காக பலர் சிலுவை சுமக்கிறார்களே! இங்கே பிறப்பது எது? அதை வரலாறு சொல்லட்டும்!

**- இணை ஆசிரியர் -**

## இறைவாக்கு

**"இயேசுக்கிறீஸ்துவின் சிலுவையை அன்றி,**
**வேறு எதைப் பற்றியும் பெருமை பாராட்ட மாட்டேன்"**

கலா 6/14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மனசே... மனசே...

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. நம் ஒவ்வொருவர் வாழ்விலும் ஆயிரம் பிரச்சினைகள். பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை உண்டா என்று கேட்டால் நம்மில் பலரும் சொல்லும் பதில் இல்லை என்பதுதான்.

வாழ்க்கையில் எல்லாப் பருவத்திலும் பிரச்சினைதான். எல்லா வகுப்பினருக்கும் பிரச்சினை தான். வாழ்க்கையில் பிரச்சினை என்றால் சமாளித்து விடலாம். ஆனால் பிரச்சினையே வாழ்க்கை என்றால் என்ன செய்வது என்று கேட்பவர்கள் - பிரச்சினையைப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல் அது ஒரு நடைமுறை, வழக்கம் என்று எடுத்துக் கொண்டால் பிரச்சினையே கிடையாது.

இதைத்தான் கவியரசர்,

"வாழ்க்கை என்றால் ஆயிரமிருக்கும்<br>
வாசல் தோறும் வேதனையிருக்கும்<br>
வந்த துன்பம் எதுவென்றாலும்<br>
வாடி நின்றால் ஓடுவதில்லை" என்றார்.

ஒரு விடயத்தை இன்பமானது, துன்பமானது, பிரச்சினையானது, பிரச்சினையில்லாதது என்பதைத் தீர்மானிப்பது மனமே.

ஒரு நிமிடம் அமைதியாக யோசித்துப் பாருங்கள்: இன்று துன்பமாகத் தெரிவது நாளை இன்பமாகவும் பிரச்சினையற்றதாகவும் தெரியும். அதனால்தான் பிரச்சினை வரும்போது அதை எளிதாக எடுத்துக்கொண்டால் பிரச்சினையே வராது.

ஓர் இடத்தில் நண்பர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு வருகிறது. ஒருவர் சத்தமாகப் பேசும்போது மற்றொருவர் அதைக் கண்டும் காணாததுபோல் வேறு விடயம் பேசினால் அங்கு பிரச்சினை வரவே வாய்ப்பில்லை. அதேபோல்தான் குடும்பத்திலும். குடும்பம் என்று வரும்போது முதலில் நம்மிடமிருந்து தலைதூக்குவது ஈகோ! யார் பெரியவர்? நீயா? நானா? இதுதான் தொண்ணூறு விகிதம் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினை.

மேலை நாடுகள், குடும்ப அமைப்பு விடயத்தில் இன்று கீழை நாடுகளைப் பின்பற்றத் தொடங்கிவிட்டன. காரணம் இங்கு குடும்ப அமைப்பானது ஓர் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுகிறது. குடும்ப அமைப்பு இங்கு இறுக்கமாக உள்ளது.

திருமணத்தின் போது எடுக்கப்படுகின்ற உறுதி மொழிகள் 'இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வோம், இருவரும் இறுதிவரை இணைப் பிரியாமல் வாழ்வோம்" - பெரும்பாலானவர்களால் காக்கப்படுகிறது. அதுவும் பிரச்சினைகளுக்கிடையில் காக்கப்படுகின்றது.

எந்தச் செயலைச் செய்தாலும் பிரச்சினை ஏற்படுவது இயற்கையே. அந்தப் பிரச்சினையைச் சமாளித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதற்கு நம் மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கணவன் மனைவி இருவரும் ஒருத்தரை யொருத்தர் புரிந்துகொள்ள வேண்டும். "மனைவி தன்னிடம் அன்பாக நடந்து கொள்வதில்லை, என்பேச்சைக் கேட்பதில்லை" என்று பல கணவர் குறைப்பட்டுக் கொள்வதுண்டு.

பெரும்பாலான மனைவிமார் தங்கள் அன்பை வெளிப்படுத்த மாட்டார்கள். ஆனால் கணவனுக்கு உடல் நலமில்லை என்றாலோ, கணவன் கவலையாக இருக்கும்போதோ முதலில் துடிப்பது மனைவியின் மனசுமட்டுமே. இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் குடும்பத்தில் அடிக்கடி நிகழாமல் இருப்பதால் மனைவி நம்மிடம் அன்பாக இல்லை என்ற நினைப்பு நம்மை வருத்தும். முதலில் அந்த நினைப்பை மாற்றுங்கள்.

கணவன்மார் மனைவியிடம் எப்படி நடந்து கொள்கின்றார்கள், மனைவியின் உணர்ச்சிகளுக்கு மரியாதை கொடுக்கிறார்களா, மனைவியின் எண்ணத்தை, அவர்களுடைய ஆசையைப் புரிந்து கொள்கிறார்களா எனப் பார்க்க வேண்டும்.

பெண்கள் வீட்டில் அடைந்து கிடப்பவர்கள். அவர்களுக்கு வெளி உலகத்தைப் பற்றித் தெரியாது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்குக் கூட வெளி உலகத்தைப் பற்றி அதிகம் தெரிய வாய்ப்பில்லை. வீடு, அலுவலகம் என்று தங்களுக்குள் ஒரு வட்டத்தைப் போட்டுக் கொள்கிறார்கள். தங்களுடைய உணர்ச்சிகளை, மனக்கஷ்டங்களை வெளியிடுவதற்குச் சரியான இடம் கிடைப்பதில்லை. எனவேதான் தன் அன்புக்குப் பாத்திரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனிடம் தங்கள் மனக்குறைகளை எல்லாம் வெளிப்படுத்துகிறார்கள். இல்லையேல் குழந்தைகளிடம் வெளிப்படுத்துகிறார்கள். இம்மாதிரியான நேரங்களில் மனைவிக்கு ஆறுதலாகப் பேசினாலோ அல்லது எதுவும் பேசாமல் இருந்தால் கூட பிரச்சினை தீர்ந்து விடும். மாறாக, மனைவி மனக் கஷ்டத்தைக் கணவனிடம் கூறும்போதோ, வார்த்தைகளை வேகமாக வீசும்போதோ பதிலுக்குக் கோபமாகக் கணவனும் பேசினால் பிரச்சினை மேலும் சிக்கலாகி, பிரச்சினைகள் அதிகமாகி வாழ்க்கையே ஒரு பிரச்சினையாகி விடும். அப்படியே கணவன் கோபமாகப் பேசினாலும் உடனே அதை மறந்து சகஜமாகப் பேசினாலேயே பிரச்சினை சரியாகி விடும்.

நம் சமுதாய அமைப்பில் ஆண்கள் யாரை வேண்டுமானாலும் கோபமாகப் பேசலாம், அடிக்கலாம், வேலைவாங்கலாம், அதிகாரம் காட்டலாம். ஆனால் பெண்கள் யாரிடம் கோபமாகப் பேசமுடியும்! யாரிடம் வேலை வாங்கமுடியும்! தன் அன்புக்குப் பாத்திரமான தன்னைப் புரிந்துகொண்ட கணவனைத் தவிர....

இந்த உணர்வு வந்தாலே எந்தக் குடும்பத்திலும் பிரச்சினை இருக்காது. எந்தப் பிரச்சினையிலும் வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதால் இறுதியில் எதுவும் ஏற்படப் போவதில்லை. வெங்காயத்தை உரிக்க உரிக்க இறுதியில் ஒன்றுமில்லாமல் போவதுபோல் எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் அதை ஆழமாக ஆராய்ந்தால் ஒன்றுமில்லாமல் போய்விடும்.

இதைப் புரிந்துகொண்டால் வீட்டிலும், வீதியிலும், நாட்டிலும் பிரச்சினையில்லை. இன்று பெரும்பாலும் காதல் திருமணங்கள் விவாகரத்தில் முடிகின்றன. காரணம் காதலிக்கும் போதிருந்த விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கல்யாணம் முடிந்தவுடன் காணாமல் போய்விடுவதுதான். காதலிக்கும் போது தனக்காக எதையும் செய்த காதலனிடம் கல்யாணமானபிறகும் அதேபோல் எதிர் பார்ப்பதால் வருகிற வினை. அதுபோல் காதலிக்கும் போது காதலி என்ன பிழை செய்தாலும் அதைப் பொறுத்துக் கொண்ட காதலன் கல்யாணமானவுடன் குறைகளை ஏற்றுக்கொள்ள முடியாததுதான். காதலிக்கும் போது கவர்ச்சி கண்ணை மறைக்கிறது. கல்யாணமானவுடன்தான் உண்மையான எண்ணம் வெளிப்பட்டு பிரச்சினை பெரிதாகிறது. நீதி மன்றம் நோக்கி விவாகரத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

விவாகரத்துக்குப் பின் பலருடைய நிலை என்ன? நிம்மதியாக வாழமுடிகின்றதா என்றால் பெரும்பாலான குடும்பங்களில் அந்த நிலை இல்லை என்றுதான் கூறவேண்டும். அதேநேரத்தில் விவாகரத்துப் பெற்ற எத்தனையோ தம்பதிகள் மனம் வருந்தித் திருந்தி மீண்டும் சேர்ந்து வாழ்வதைக் காணலாம்.

எந்தப் பிரச்சினைகளையும் பிரச்சினையாக எடுத்துக் கொண்டால் பிரச்சினைதான; எதையும் எளிதாக எடுத்துக் கொண்டால் பிரச்சினையில்லை!

ஒரு விடயத்தைப் பிரச்சினையாக்குவதும், பிரச்சினையாக்காமல் இருப்பதும் மனமே! அந்த மனதில் கவர்ச்சி, கோபம், விருப்பு, வெறுப்பு, ஆதிக்கம் என்ற மாயத்திரையை விலக்கிப் பார்த்தால் அங்கே மகிழ்ச்சி, மனநிம்மதி என்ற வெளிச்சம் கிட்டும்.

(மனதைக் காண்போம்)

## புனித சவேரியார் பிறப்பின் 500வது ஆண்டு

மறைபோதக நாடுகளின் பாதுகாவலர் எனப்போற்றப்படும் புனித பிரான்சிஸ் சவேரியாரது பிறப்பின் 500வது ஆண்டைச் சிறப்பாகக் கொண்டாட அவர் பிறந்த நாடான ஸ்பெயின் நாடு ஆயத்தங்களைச் செய்து வருகின்றது. இந்நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் எதிர்வரும் 2005ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி ஆரம்பமாக உள்ளது. புனித இஞ்ஞாசியாருடன் இணைந்து இயேசு சபையை உருவாக்கியவர்களுள் ஒருவரான சவேரியார் இந்தியாவில் உள்ள கோவா மாநிலத்தில் 1542ல் தமது மறைப் பணியைத் தொடங்கினார். சீனாவுக்குச் செல்லும் வழியில் 1552 ஆம் ஆண்டு இறந்தார். கோவாவில் பாம்பீசோ ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள புனிதரின் திரு உடல் நவம்பர் 21 முதல் எதிர்வரும் ஜனவரி 02 வரை பொது மக்களின் தரிசனத்துக்காக வைக்கப்படும். புனித சவேரியாரது வரலாறு தற்சமயம் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் தயாகும் இத்திரைப்படம் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் வெளிவரவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## ஆமையும் முயலும்

**பாகம் 1**

எம்மனைவருக்கும் ஆமையும் முயலும் ஓட்டப் பந்தயம் வைத்த கதை நன்றாகத் தெரியும். முயல் துயில் கொண்டதால் ஆமை வென்று விட்டது.

இதன் இன்னுமோர் பாகம் சில தசாப்தங்களின் முன் சிந்தாமணியில் வந்ததாக ஞாபகம். அதனைச் சற்று மெருகுபடுத்தித் தற்போது பார்ப்போம்.

**பாகம் 2**

ஆமை வெற்றி அடைந்ததைப் பற்றி முயல்களுக்கு கடும் அவமானம்: இவ்வுவமானம் பரம்பரை பரம்பரையாக முயல்களிடம் காணப் பட்டது.

ஒரு நாள் காட்டில், சிங்கராஜா தலைமையில் 'கானகக் கொண்டாட்டம்' நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட விலங்கு களுக்கு மதுபானம் பரிமாறப்பட்டது. முயல் களுக்குச் சற்றுப் போதையேறி விட்டது. எனவே அவை ஆமைகளிடம் தகராரு செய்தன. எங்கள் பரம்பரைக்கு வந்த அவமானத்தைப் போக்கு வதற்கு மீண்டும் ஓட்டப்பந்தயம் வைக்கவேண்டும் என வாக்கு வாதப்பட்டன.

"ஆமையும்,ஆமையும், ஓடிவெல்பவன் வீரன்" -முயலும் முயலும் ஓடி வெல்பவனும் வீரன்- என ஆமைகள் சொல்லின. இதனை முயல்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. வாக்குவாதம் கைகலப் பாக மாறிவிட, சிங்கராஜா தலையிட்டு, இருதரப் பினரையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. பேச்சுவார்த்தையின் முடிவில் மீண்டும் ஒரு முறை போட்டிவைப்பதென முடிவாகியது.

காட்டில் போட்டி ஆரம்பமாகியது. முயல் கவனமாக ஓடியது: ஆமை ஊர்ந்து சென்றது.



முயல் காட்டுக்குள் சென்ற வேளை, இரண்டு வேட்டையாட்கள் துப்பாக்கியுடன் வந்ததைக் கண்ணுற்று, அருகில் இருந்த பற்றைக்குள் புகுந்து பதுங்கி விட்டது.

வேட்டையாட்கள் அசைவதாக இல்லை: முயலாலும் வெளியில் வர இயலவில்லை. இவ்வேளையில் அவ்விடத்துக்கு ஆமை வந்து சேர்ந்தது. வேட்டைக்காரர்கள் ஆமையைக் கண்டு விட்டனர். 'தோட்டாக்கள் வீணாகாமல் நல்லதோர் கறி' என்று கூறியவாறு பையொ ன்றினுள் ஆமையைப் பிடித்துப் போட்டுக் கொண்டு சென்றுவிட்டனர்.

முயலுக்கோ மிகவும் சந்தோஷம்: ஆமைக்கு பெரும் திண்டாட்டம். எனினும் முயல் உடனடியாக வெளியில் வரவில்லை.

ஆமையைக் கொண்டு சென்ற வேட்டை யாட்களுக்கும் ஒரு சங்கடம் ஏற்பட்டது. நீண்ட தூரம் சென்ற பின் ஓரிடத்தில் வன இலாகா அதிகாரிகளைக் கண்டனர். ஆமை பிடித்தது சட்ட விரோதம் அல்லவா...? மெதுவாக ஆமையை வெளியில் போட்டுவிட்டு நல்ல பிள்ளைகள் போல் சென்று விட்டனர்.

ஆமையும் பயத்தால் விரைவாகச் செல்ல ஆரம்பித்தது. என்ன ஆச்சரியம் என்றால், ஆமையை வேட்டைக்காரர்கள் விட்ட இடத்திற்கு அண்மையில்தான் போட்டியின் முடிவிடமும் அமைந்திருந்தது. ஆமைக்கு இம்முறையும் வெற்றி.

பற்றைக்குள் இருந்த முயல் அரவங்கள் அடங்கிய பின் வேகமாக ஓடத்தொடங்கியது. 'ஆமையானது குழம்புச் சட்டிக்குள் இருக்கும்' என்ற எண்ணம் அதை ஆனந்தப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவிடத்தை அடைந்தவுடன் அதற்கு அதிர்ச்சி. ஆமை முயலிடம் மெதுவாகச் சொன்னது... 'அவதிப்படுவானேன் மூக்குடைபடுவானேன்...?

**பாகம் - 3**

( மிக அண்மையில் உண்டாக்கப்பட்ட பாகம் இது. செவி வழியே கேட்டது)

இன்னும் சில காலம் சென்றபின் மீண்டும் போட்டிவைக்க வேண்டும் என முயல்கள் அடம்பிடித்தன. தொல்லை தாங்காது ஆமைகள் வேண்டா வெறுப்பாக சம்மதம் சொல்லின. இம் முறை போட்டி காட்டுக்குள் இல்லை. வேட்டைக் காரர்கள் பயம். எனவே A9 பாதையில் போட்டி வைக்க வேண்டும் என முயல்கள் வலியுறுத்தின. போட்டி ஆரம்பமானது. முயல் கடுகி விரைந்தது. ஆமையும் கடுகி ஊர்ந்தது. முயலைக் கண்ணுக் கெட்டிய தூரம் வரையிலும் ஆமையால் காண முடியவில்லை. ஆமை போட்டியின் முடிவிடத்தை அடைந்தது. என்ன ஆச்சரியம்! இம்முறையும் ஆமைக்குத்தான் வெற்றி. "முயல் எங்கே" என்று ஆமை கேட்டது.

அதற்கு கிடைத்த பதில், **"Over Speed"** என்று முகமாலையில் பிடிச்சுப் போட்டாங்கள்..."

---

# நாவினால் சுட்ட வடு

"நீ உருப்படமாட்டாய்'

'உனக்கு இந்த வேலை எப்படிக் கிடைச்சது? இலஞ்சம் கொடுத்துச் சேர்ந்தியா?

'உனக்கு இந்த மாதிரி வேலை எல்லாம் சுட்டுப் போட்டாலும் வராது. நீ எதுக்குக் கிடந்து கஷ்டப்படுறா....ம், எப்பிடியோ ஒரு வழியா செய்து முடிச்சுப் போட்டா என்ன.... ஆச்சரியம்தான்.

இவை அன்றாடம் வெவ்வேறு இடங்களில் பரிமாறப்படும் சுடும் சொற்கள் - சுடும் வார்த்தைகள், இவை பெரும் பாதிப்பிற்கு உள்ளாக் குகின்றன. இனிய சொற்கள் இருக்கும்போது ஏன் இவ்வாறு பேசுகிறார்கள்? ஏன் பிறரின் மனதைப் புண்படுத்து கின்றார்கள்?

மேலதிகாரி கடுமையான வார்த்தை களால் திட்டியதை எதிர்த்துப் பேச முடியாத தொழிலாளி தன் மனைவி மீது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்க்கிறான்.

காதலன் வருவான் என்று காத்திருந்து ஏமாற்றமடைந்த நர்ஸ், நோயாளி மீது தன் கோபத்தைக் காட்டுகின்றாள்; எரிந்து விழுகிறாள். வருமானம் போதாத பஸ் கண்டக்டர் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளை ஏக வசனத்தில் திட்டுகிறார்.

இவர்கள் கோபப்படுவதற்கான பின்னனி யையும்அதற்கான மூல காரணத்தையும் அறிய வேண்டும். சிலவற்றை நகைச்சுவையாக எடுத்துக் கொள்ள வேண்டும். நண்பர்கள் முன்னிலையில்



மனைவியைக் கேவலமாகப் பேசுவதை வாடிக்கையாகக் கொண்ட கணவர் பலர் இருக்கின்றனர். இவர்களை எப்படிச் சமாளிப்பது? சிலவேளைகளில் அப்படியான பேச்சுக்களைக் கேளாதவர்களாக, அவற்றைக் கவனிக்காதது போல வேறு செயல்களில் ஈடுபடுங்கள். உணர்ச்சி வசப்படுவதைக் குறைத்துக் கொண்டு ஏதும் உறைக்காதது போல் நடந்து கொள்ளுங்கள்.

புத்தரை ஒரு சமயம் ஒருவன் கடுமையான சொற்களால் திட்டினான். புத்தர் அவனைப் பார்த்துச் சொன்னார்: "நீ அளிக்கும் அன்பளிப்பைப் பெற்றுக்கொள்ளாதபோது, அப்பொருள் யாரிடம் இருக்கும்? அதுபோலத்தான் கடும் சொற்களை நாம் சட்டை செய்யாவிடில் சொன்னவனையே போய்ச் சேரும்" என்றார். இயேசு பிரானும் தீமையைத் தாங்கும் பொறுமையை 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு' என்கிறார். எதையும் பெரிதுபடுத்தாமல் இருக்கும் மனப்பக்குவம்தான் மனித நேயத்தையும், நட்பையும் வளர்க்கும்; மன அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழிவகை செய்யும். இன்னா செய்தார்க்கும் இனியவை செய்ய மேண்டும் என்கின்றார் வள்ளுவர். அதுவே மனிதப் பண்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




33. வாள் முனை தன்னைக் கொண்டு
வல்லர சாட்சி செய்தால்
ஊழ்வினை உறுத்தும் வந்து
உலகிது உணர்த்தும் பாடம்
சூழ்வினை தன்னை வெல்ல
தூயநல் மனமே போதும்
ஆள்முடி மன்னா அந்த
அசோகனை அறிவாய் அன்றோ?

34. துறவியின் பேச்சைக் கேட்டுத்
துர்க்குண மனிதன் நல்ல
பிறவியே எடுத்தான் போலப்
பிள்ளையின் மனத்தைப் போல
அருவியாய்க் கண்ணீர் ஓட
அகந்தையே இல்லான் ஆக
உருவியே வாளைக் கையால்
ஒருபுறம் வீசிப் போட்டு

35. இனிஒரு யுத்தம் இல்லை
என்மனம் தெளியச் செய்தீர்
தனிஒரு மனித னாகத்
தன்னலப் பேயே யாக
மனிதரைக் கொன்றேன் நானும்
மாபெரும் பாவம் செய்தேன்
புனிதரே தாங்கள் என்னைப்
பொறுத்தருள் செய்ய வேண்டும்.

36. போதியில் ஞானம் பெற்ற
புத்தரின் சீடர் தாங்கள்
ஓதிய வார்த்தை தன்னில்
உண்மையைத் தெளிவாய்க் கண்டேன்
நீதியில் இருந்து நானும்
நிச்சயம் பிறழ மாட்டேன்
பாதியில் வந்த துன்பம்
பனிஎன மறையும் என்றான்.

37. கன்னலைப் போல வார்த்தை
காதினில் நுழைந்த தாலே
மன்னவன் தன்னைப் பார்த்து
மகிழ்ச்சியில் நன்றி கூறி
அன்னவன் தன்னைக் காண
அவரடி எடுத்து வைப்பார்
மண்ணினில் அமைதி காண
மறவனின் துணையும் வேண்டும்.

38. வீரனைக் கண்டார் கையில்
வில்லுடன் கணையு மாக
ஈரமே தெரியக் கண்ணில்
இருகரம் நீட்டிக் கொண்டு
தீரனே வாழி என்று
தேரரும் அணைத்துக் கொள்வார்
பாரமே இறங்கிப் போகும்
பண்பினில் தெய்வமானார்.

39. மன்னன் தன்னை நானும்
மாளிகை தன்னிற் கண்டு
உண்மையை இதமாய்ச் சொல்லி
உள்ளத்தை மாற்றி விட்டேன்
எண்ணமே புதிதாய் ஆனால்
இப்புவி சொர்க்க மாகும்
தன்னலப் பேயே எங்கள்
தனிப்பெரும் எதிரி யாகும்.

40. சண்டையை நிறுத்திக் கொண்டால்
சமாதான முழக்கம் கேட்பாய்
பண்டையக் காலம் போல
பரஸ்பர சினேகத் தோடு
மண்டலம் எல்லாம் காண
மனிதராய் வாழ்வோம் இந்தச்
சுண்டங்காய்த் தேசம் வீணாய்ச்
சுடுகாடு ஆக லாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. வன்முறை வழியிற் சென்று
வாகைநீ சூடல் கேடு
நன்முறை தன்னை நாடு
நாடுனைப் போற்றும் நாளை
பன்முறை நானும் சொன்னேன்
பகவனின் அகிம்சைப் பாதை
உன்முறை ஆக்கிக் கொள்வாய்
உகந்தது அதுதான் தம்பி

42. எடுத்ததுக் கெல்லாம் கத்தி
ஏந்துதல் முறையோ சொல்வாய்
அடுத்தவன் உயிரைக் கொன்று
அடைந்திடும் நன்மை என்ன?
விடுத்துநீ விலங்கின் போக்கு
விரும்புவாய் மனிதத் தன்மை
தடுத்துநான் காக்க வந்தேன்
தர்மத்தின் தூத னாக.

43. ஆத்மீக பலமே வாழ்வில்
அதிஉயர் பலமாம் உண்மை
சாத்வீக வழியிற் சென்றால்
சகலமும் நலமே ஆகும்
ஆத்திரம் கோபம் உன்னை
அழிவினிற் கிட்டுச் செல்லும்
வார்த்தை நான் சொன்னேன் தம்பி
வழிஅறம் நாடு வாயே!

44. உனக்கொரு தீங்கு நேர்ந்தால்
உயிருடன் இருக்க மாட்டேன்
எனக்கென்ன? எதுவும் தூசு
எவருமே எஜமான் இல்லை
இனிக்கின்ற வார்த்தை பேசி
என்றுமே அறியேன் தம்பி
தனக்கென வாழாப் பிக்கு
தருமத்தின் துணையே போதும்.

45. உன்னவர் வாழ்வார் இங்கே
உரிமைகள் யாவும் உண்டு
மன்னவன் வாக்குத் தந்தான்
மதித்துனை அழைத்தான் பேச
சின்னவன் அல்ல நீயே
சிறந்ததோர் வீரன் கண்டேன்
என்னைநீ நம்ப வேண்டும்
இதில்ஒரு சூழ்ச்சி இல்லை.

46. நம்பியே கெட்டோம் நாங்கள்
நடந்ததை அறிவீர் தாங்கள்
வெம்பியே துடித்தோம் அன்று
வேறொரு வழியு மின்றி
கம்பினைப் பொல்லைத் தேடிக்
கையினில் எடுத்துக் கொண்டோம்
வம்பினை வளர்த்தோர் யாரோ?
வரலாறு சொல்லும் அய்யா!

47. வார்த்தையை நம்பி நானும்
வருகின்றேன் ஆனால் வாளைச்
சேர்த்துநான் வைத்துக் கொள்வேன்
சிறிதுமே ஐயம் வேண்டாம்
மூத்தவர், பெரியோர் தாங்கள்
மொழியினில் தூய்மை கண்டேன்
பார்த்திபன் செயலைப் பார்ப்போம்
பக்குவம் இருந்தால் போதும்.

48. வீரனின் பேச்சைக் கேட்டு
விருப்புடன் மக்கள் எல்லாம்
போரிதை நிறுத்த வேண்டும்
போதும்நாம் பட்ட பாடு
தேரரும் அழைத்தார் அந்தத்
திருமகன் சொல்லை ஏற்று
வீரனே, போய்வா உன்னை
வெற்றியும் சேரும் என்றே.

49. கட்டியே அணைத்துக் கொண்டார்
களிப்பினில் முத்த மிட்டார்
தட்டவே வேண்டாம் நல்ல
தருணத்தை விடுதல் ஆகா
கெட்டியாய்ப் பேசல் வேண்டும்
கிடைப்பதை விடவும் கூடா
முட்டினால் அழிந்தே போவோம்
முட்டாள்நாம் ஆக லாமோ?

50. அறிவுரை சொன்னார் மக்கள்
அன்புரை பகர்ந்தார் மக்கள்
பிரிவினைக் கொள்கை யாலே
பிணங்கள்தான் குவியும் இங்கே
கருமமே கண்ணாய்க் கொண்டோம்
காலமும் வந்த தாலே
உரியவன் நீயே சென்று
உடன்பாடு காணு வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. மக்களின் பேச்சைக் கேட்டு
மகிழ்ச்சியில் திளைத்துப் போவார்
பிக்கவர் கருணை என்னும்
பேறினைப் பெற்ற சான்றோன்
சிக்கல்கள் எல்லாம் தீரும்
சிறுபான்மை யேனும் நாமே
ஐக்கிய மாக வாழ்வோம்
அமைதியே வேண்டும் என்றார்.

52. ஆர்த்தது மக்கள் கூட்டம்
அவ்வுரை காதிற் கேட்டு
தீர்த்தது துயரம் எல்லாம்
திருவருள் அதுவே என்று
கூத்தவர் ஆடு வார்கள்
குரவையே இடுவர் பெண்கள்
பார்த்தவர் எல்லாம் அந்தப்
பரவசந் தன்னில் ஆழ்வார்.

53. இருவரும் போனார் ஆங்கு
இன்முகத் தோடு மன்னன்
வருகவே என்பான் வீரன்
வணக்கமும் சொல்லிக் கொள்வான்
அருகினில் இருப்பீர் என்னும்
அரசனின் வார்த்தை தன்னை
பருகிய வண்ணம் வீரன்
பக்கமாய் அமர்ந்து கொள்வான்.

54. மாதவன் சொல்வான் அங்கு
மனம்விட்டுப் பேசல் வேண்டும்
தூதுநான் வந்தேன் அன்புத்
தோழமை உள்ளத் தோடு
காதினில் அதனைக் கேட்ட
காவலன் மகிழ்ந்த வாறு
நீதமாய்ப் பேச லானான்
நிகழ்ந்ததை மறப்போ மென்றே.

55. இணக்கமே கண்டார் அந்த
இருவரும் பேச்சி னூடே
பிணக்குகள் தீர்ந்து போகும்
பிக்குவின் அருளி னாலே
சுணக்கமே இன்றி நாடு
சுபீட்சமும் காணும் அன்பு
வணக்கமே சொன்னேன் நானும்
வாழிய மக்க ளெல்லாம்!

**-முற்றும்-**

## தொடர்பு சாதனமே குடும்ப நண்பர்

சுழல்கின்ற பூமிக்குள் இயங்க மனிதனைப்
படைத்தான் இறைவன் - அந்த
உலகுக்குப் புதுமை புரிய தொடர்புச்சாதனங்கள்
படைத்தான் மனிதன்.
இக்கரையில் உள்ள குரலையும், எழுத்தையும்
தொலைபேசி, தொலைநகல் அக்கரைக்குச்
சுமந்து செல்லும்.
வெளியில் செல்லாமல் ......யாரும் சொல்லாமல்
பத்திரிகை புகட்டும் ஊர், உலக நடப்பை.
அறிவை மட்டுமன்றி முகம் தெரியாத நட்பின்
முகவரியும் தரும் தொடர்புச் சாதனம்.
உற்றாரின் மரண அஞ்சலி, மணமக்கள் தேவையை ......
பத்திரிகை அறிவிக்கும்.
இல்லத்தரசியின் தனிமைக்கு வானொலி இனிமை ......
செவிக்குள் ஒலி செலுத்திக் கொண்டே
விரைவாய் விருந்து சமைக்கலாம்.
நான்கு சுவருக்குள்ளே உலகழகும், கலையுணர்வும்
காட்டும் தொலைக்காட்சி - இது இருக்கையில்
எம்மை ஒட்ட வைக்கும் பசை!
தந்தையர்க்கு செய்தியறிக்கை ரொம்பப் பிடிக்கும் ......
நங்கையருக்கு நாடகம் தன்னிலை மறப்பிக்கும்.
வந்தோரை வரவேற்க ஆளில்லை ..... விளம்பரம்
கண்ட மனைவி, வருமானம் புரியாமல்
புடவைக்கு அடம்பிடிப்பாள்.
ஒரு மனிதன் உருவாக்கிய கணணி - இது
ஆயிரம் பேரின் அறிவையும் வேகத்தால் மிஞ்சியது!
ஆண்டவரைத் தவிர அகிலமே அடங்கும்
இண்டர்நெட்டில்!

உலகமே உய்வுறும் தொடர்புத் துறையால் -
அதை உபயோகிக்கும் குடும்பம் முழுமைபெறும்!
தீமையும் உள்ளதுதான் இவற்றில் - எனினும்
நீ ஆறறிவு மனிதன் தானே. நன்மையை
மட்டும் துய்த்துணர்!

**R. தேவகுமாரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை அறிவை வளர்ப்போம்

### இஸ்ராயேலர் தளபதி யோசுவா

குலமுதுவரான யோசுவா இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர். இவரது தந்தையார் பெயர் நூன். மோசேயின் உதவியாளராகவும், மோசேக்குப் பின் இஸ்ராயேல் மக்களின் தலைவராகவும் செயற்பட்டவர். மோசேயின் இறப்புக்குப் பின் தலைமைப் பதவியை இவரை ஏற்குமாறு இறைவன் கூறினார். பாலைவனத்தில் நாற்பது ஆண்டுகளாக அலைந்து திரிந்த பின்னர் இஸ்ரயேலர் வாக்குப் பண்ணப்பட்ட பூமியை நெருங்கினர். மோசே இறந்ததும் யோசுவா தலைமை தாங்கினார். இவரது தலைமையின் கீழ் அவர்கள் வாக்குப் பண்ணப்பட்ட நாட்டுக்கு வந்தனர். இவர் இந்நாட்டை இஸ்ரயேல் கோத்திரங்கள் பன்னிரண்டுக்கும் பகிர்ந்தளித்தார். பாலும், தேனும் பொழியும் ஒரு நாட்டைத் தருவதாக அன்று ஆபிரகாமுக்கு இறைவன் வாக்களித்தபடி, அவர்கள் வந்தடைந்த நாடும் மிகவும் செழிப்புடன் காணப்பட்டது. இஸ்ரயேலர் அங்கு சுகபோகம் நிறைந்த வாழ்க்கையை, ஒரு நிறைவான வாழ்க்கையை அனுபவித்தனர். யோசுவா சிறந்த நிர்வாகியாகவும், சிறந்த வீரராகவும் காணப்பட்டதால், அவரது தலைமையின் கீழ் பலம் வாய்ந்த இனமாக இஸ்ரயேல் இனம் காணப்பட்டது. யோசுவாவின் மரணத்திற்கு முன்னர், எகிப்து தேசமாகிய அடிமை இல்லத்திலிருந்து தம்மை வெளியேற்றிக் கொண்டு வந்த இறைவனுக்கு அன்றி வேறு எத்தெய்வங்களுக்கும் வழிபாடு செய்ய வேண்டாமெனக் கேட்டுக்கொண்டார்.



இவரது திறமையான செயல்களாலும், தலைமைத்துவத்தாலும் இஸ்ரயேல் இனம் வழி நடத்தப்பட்டு வந்தது. எனவே, இவர் மரபுவழியாகப் போற்றப்படுவதை நாம் அறிய முடிகிறது. இதனால்தான் திருவிவிலியத்தில் இவர் சிறப்பிக்கப்படுகிறார். திருவிவிலியத்தில் இணைச் சட்டத்திற்குப் பின்னால் யோசுவா எனும் நூல் 24 அதிகாரங்கள் கொண்டதாகவும், அவர் மோசேயின் மரணத்தின் பின் தலைமை தாங்கியதிலிருந்து அவரது மரணம், அடக்கம் வரையிலான வரலாற்றைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளதிலிருந்து நாமிதையறிந்து கொள்ளலாம்.

### வாக்களிக்கப்பட்ட பூமியில் வாழ்ந்தவர்கள்

இஸ்ராயேலரின் வரலாற்றை நாம் கூர்ந்து அவதானிப் போமானால், அவர்கள் பாவம் செய்வதும், அதன் தண்டனையயடைவதும், மீண்டும் இறையருளால் கைதூக்கப் படுவதும் நாம் அடிக்கடி காணக்கூடிய விடயங்களாகும்.

பாலைவனத்தில் 40 ஆண்டுகளாக அலைந்து திரிந்து, பின்னர் வாக்களிக் கப்பட்ட பூமிக்கு வந்து சேர்ந்தனர் இஸ்ரயேலர். மோசேக்குப் பின் யோசுவா இவர்களை வழிநடத்தினார். ஆயினும், யோசுவாவின் மரணத்தின் பின், இவர்கள் பல சந்தர்ப்பங்களில் இறைவனை மறந்து அவர்களோடிருந்த பிற இனத்தவரின் தெய்வங்களுக்கு வழிபாடுகள் செய்ய ஆரம்பித்தனர். இதனால், இறைவனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையை மீறினர். இதன் பிரதிபலன், மீண்டும் இஸ்ரயேல் இனத்திற்கு தமது தாய்நாடு உரிமையற்றதானது.

இறைவனோ, தம் மக்களை மீண்டும் தம்முடன் ஒப்புரவாக்க, மீண்டும் தம் அண்டை அழைத்து வர இறைவாக்கினர் பலரை அவர்களிடம் அனுப்பி அவர்களோடு பேசினார். அவர்கள் தமது குற்றங்களை உணர உதவி செய்தார். ஆனாலும், முரட்டுத்தனம் கொண்ட அவர்கள் இறைவாக்கினரைத் துன்புறுத்தினர். எனவே பபிலோனியாவுக்கு அடிமைகளாக நாடுகடத்தப்பட்டனர். இக்காலம் நாடு கடத்தப்பட்ட காலம் என அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பபிலோனிய அடிமைத்தனத்தின்போது அவர்கள் தம் குற்றங்களை உணர்ந்தனர். உண்மையாகவே மனம் வருந்தினர். அவர்களோடு வாழ்ந்த எசக்கியேல் இறைவாக்கினரும் அவர்களது குற்றங்களை அவர்களுக்குணர்த்தினார். எரேமியா நூலில் கூறப்படுவதுபோல் எழுபது ஆண்டுகள் இந்த அடிமைத்தனத்தை அனுபவித்தனர். சில காலத்திற்குப் பின் பாரசீக அரசனான சைரஸ் பபிலோனிய மன்னனானதும் முதல் ஆண்டிலேயே இஸ்ரயேலரை மீண்டும் தம் நாடுசெல்லவும், ஜெருசலேம் ஆலயத்தைக் கட்டவும் அனுமதியளித்தான். இவ்விதமாக தம் தண்டனை நீங்கப் பெற்ற இஸ்ரயேல் மக்கள் மீண்டும் தமது தாய் நாடு சென்றனர்.

மெற்றில்டா

## எமை எண்ணிப்பார்ப்போம்

ஆண்டவன் ஆணடவன் என அழைக்கின்றோம் - நாம்
அயலவர் அழுதிடவே அமிழ்த்துகின்றோம்.

கண்ணிருந்தும் குருடராய் வாழுகின்றோம் - நாம்
காதிருந்தும் செவிடராய் செல்லுகின்றோம்.

புகட்டுகின்றோம் பிறர் புரிந்திடவே - அதை
விரட்டுகின்றோம் எம் வாழ்விலிருந்தே

உதவியைச் செய்ய முனைகின்றோம் - பின்பு
உபத்திரவங்களாக உருவெடுக்கின்றோம்

வழிதெரிந்தும் - நாம்விழியிருந்தும் - பெரும்
குழியின் விளிம்பிலே நடக்கின்றோம்.

ஏன் இந்த முரண்பாடு போலி வாழ்வு - ஒரு
கணமேனும் இதை நாம் எண்ணிப்பார்ப்போம்.

- அன்புக்குழந்தை -

## அக்கரைப்பற்றில் புனித ஆரோக்கிய அன்னைக்கு புதிய ஆலயம்

கல்முனை மறைக்கோட்டத்தைச் சேர்ந்த அக்கரைப்பற்றுக் கிராமத்தில் புனித ஆரோக்கிய அன்னைக்குப் புதிய ஆலயம் நிர்மானிக்கப் பட்டுள்ளது. 1942 ம் ஆண்டு சிற்றாலயமாக இருந்து 1950 களில் பங்குத் தந்தையாக இருந்த அருள்தந்தை கொட்பிறி குக் யே. ச. அவர்களால் பெரிதாக்கப்பட்ட இவ்வாலயம் தற்போது விசுவாசிகளின் தேவை கருதி புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. பங்குத் தந்தையின் வழிகாட்டலோடு பங்கு மக்கள், மற்றும் தொழலாளர்கள் இரவு பகலாக உழைத்து ஆறுமாதங்களில் ஆலய நிர்மாணப் பணிகளை முடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான செலவில் ஐம்பது வீதத்தை மறைபரப்புப் பணிக்கான உதவிச் சபை வழங்கியிருந்தது. மிகுதியை பங்கு மக்களும், ஏனைய உதவியாளர்களும் வழங்கினர்.

பெருபான்மையான இஸ்லாமிய மக்களையும் இந்து மக்களையும் கொண்ட இப்பிரதேசத்தில் கத்தோலிக்க விசுவாசத்தின் சின்னமாகத் திகழும் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் புதுப்பொலிவோடு விளங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும். புதிய ஆலயத்தில் புனித ஆரோக்கிய அன்னையின் திருவிழா இம்மாதம் 12ம் திகதி கொண்டா டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப இந்தப் பழைய சாமானுகள யார்தான் கவனிக்கின்றார்கள். காலம் மாறுகின்ற போது கோலங்களும் மாறத்தானே வேணும்: வானொலி தொடங்கி டீவி வரையும் எல்லாம் புதுமை! சொல்லப் போனால் கொம்பியூட்டர் யுகம்! ஏன் கடைத்தெருவுக்கு போனால் பார்க்கப் பார்க்கப் பதினாறு கண்கள் வேணும்.! எல்லாம் பிளாஸ்டிக், றப்பர், கண்ணாடி! எந்தத் தளபாடங்களுக்கும் தட்டுப்பாடே இல்லை: மலிவும் கூட: அப்பப்பா.... உண்மையிலேயே உலகத்தைப் பாராட்டத்தான் வேணும்! பாவனைத் தளபாடங்கள் கூட ஒருகாலத்தில் எங்கள் பரம்பரையாகத்தான் வருமாக்கும்: ஏன் இப்பொழுது வரத்தொடங்கி விட்டதே!

வாய்க்கு வந்தபாட்டில் பேசி முடித்து விட்டு கீழே இருக்கின்ற வெண்கல வட்டாவைப் பார்த்து ஒரு ஏளனச் சிரிப்பு சிரித்துவிட்டு திரும்பியது, மேசை மேலே இருந்த பிளாஸ்டிக் வெற்றிலை வட்டா.

பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு, கைப்பு, புகையிலை என்று தன்னை அலங்கரித்து நிற்கும் இத்தனை பொருட்களுக்கும் மத்தியில், பாக்கு வெட்டியுடன் கலகலப்பாக அந்தப் பெரிய வீட்டில் ஆள்மாறி ஆள் வலம் வருவது அந்தப் பிளாஸ்டிக் வட்டாவுக்கு ஒரு பெருமையும்தான்!

குத்தலும் வெட்டலுமாகப் பேசி முடித்துவிட்ட பிளாஸ்டிக் வட்டாவின் வார்த்தைகள் கீழே இருந்த வெண்கல வட்டாவுக்குப் பொறுக்கவில்லை! வட்டா, வட்டி, சேருவாக்கல், தட்டம், குத்து விளக்கு, தாள்விளக்கு, தூக்கு விளக்கு, வெற்றிலை உரல், என்று ஒரு வெண்கலக் குடும்பமே அந்த வீட்டை மாளிகையாக அலங்கரித்துக் கொண்டிருப்பது இந்தப் பிளாஸ்டிக் வட்டாவுக்குப் புரிந்ததோ புரியவில்லையோ தெரியாது!

# பழசும் புதுசும்

**உருவகக் கதை**

வெண்கல வட்டா வாயைத் திறந்து "வார்த்தை இருக்கிறது என்பதற்காக எடுத்ததெல்லாம் பேசி மற்றவர்களை மட்டம் தட்டி விட்டால் தாங்கள் பெரியவர்கள், புத்திசாலிகள், என்று எண்ண மாக்கும்.! நாங்கள் தான் இந்த உலகத்தின் பாரம்பரியங்கள்! ஒரு காலத்தில் இந்த உலகத்தின் நவயுக சிற்பிகள்! இப்போது நீங்கள் பாவனைப் பொருட்கள் நாங்கள் காட்சிப் பொருட்கள், அவ்வளவுதான்! ஏன்? காட்சிப்பொருட்கள், என்றவுடன் சிரிப்பு வருதாக்கும்! நாங்களும் ஒரு காலத்தில் பாவனைப் பொருட்கள் தான். கண்டிராசன் கூடப் பாவித்த பொருட்கள் முழுக்க முழுக்க எங்கள் குடும்பத்தின் வழித் தோன்றல்களைச் சித்தரிக்கும் காலக்கண்ணாடிகளாக நூதன சாலையில் காட்சிப் பொருளாக இருப்பது கூடப் புரியவில்லையாக்கும்...! உங்கள் திருவுருவ மேனி கால வெள்ளத்தில் எந்த அளவுக்கு நிற்கப் போகிறது என்பதை நினைத்தால் சிரிப்பாக இருக்கிறது! இரண்டு வெயிலில் கிடந்தால் போதும், உண்ணி பிடித்தவனின் தேகம் போல, அங்கமெல்லாம் வெடித்து பொரு பொருவென்றாகி விடும்! இரண்டு நாளைக்கு சோப் போட்டு கழுவா விட்டால் போதும், அதோ அந்தா நிற்கிறதே பல்லைக் காட்டிக் கொண்டு மந்திக் குரங்கு, அதனுடைய முகத்தைப் போலதான் இருக்கும்! பாவம் உங்களைப் போன்ற புதுமைப் பித்தர்களின் சிந்தனை வெறி தானாக்கும். காட்டில் வாழும் விலங்குகள் கூட இப்போது நாட்டுக்கு வந்து விட்டன. எல்லாம் புதுமை புதுமை என்று கத்துகின்ற நீங்கள் இவைகளைக் கொஞ்சம் யோசித்து உங்கள் சிந்தனையைத் திருப்பிக் கொள்ளுங்கள்

வெண்கல வட்டா பேசி முடியவில்லை: கதவு, சாளரம், கண்ணாடி, துணிமணியெல்லாம் ஓர் உலுப்பு உலுப்பி விட்டது அங்க வந்த பெருங்காற்று. அந்தக் காற்றின் விசைக்குத் தாக்குப் பிடிக்க முடியாத பிளாஸ்டிக் வட்டா கீழே விழுந்து உருண்டு வட்டம் போட்டுக் கொண்டிருந்தது! வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு டப்பியெல்லாம் சிதறிப் போய்க் கிடந்தன:

"இதுதான் நான் சொன்னன், இந்த வெண்கலச் சாமானுகளப் பாவிச்சாதான் என்னவாம்? பார்த்தீர்களா அம்மா உங்கட வெற்றிலை வட்டா போன போக்க? ஒண்டையும் ஒரு காலத்துக்கும் எடுக்க மாட்டீங்களே?

"ஏ! சும்மா கிட புள்ள அவுங்கள இனி ஒருக்காப் பூசி மினுக்கி அழகு பார்க்கத்தான்! செழும்பு புடிச்சிப் போகும்!"

மகளின் வார்த்தைக்கு வயது முதிர்ந்த அந்தத் தாய் பதில் சொல்லி முடிப்பதற்கும் வீட்டு வாசலில் ஒரு மோட்டார் வாகனம் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. வண்டியில் வந்தவர்கள் - "அம்மா எங்களுக்கு ஓர் உதவி தேவையாக இருக்கிறது, அதுதான் நாங்கள் வந்தோம்: " என்ன உதவி தம்பி? அம்மா கேட்டாள்: "ஒன்றும் இல்லையம்மா நாங்கள் ஒரு கண்காட்சி நடத்திப் பரிசுகள் வழங்கத் தீர்மானித்திருக்கின்றோம். எங்களுக்கு பழைய பாரம்பரியப் பொருட்கள் கொஞ்சம் தேவையாக இருக்கிறது. அதாவது வெண்கலம், பித்தளை, இரும்பு, பொன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியிலான பாவனைப் பொருட்கள் பழங்காலத்துப் புராதனச் சின்னங்கள். உங்கள் வீட்டைப் பார்த்தாலே அழகாகத்தான் இருக்கிறது. அத்தனை வெண்கலப் பொருட்கள் அல்லவா உங்கள் வீட்டை அலங் கரித்துக் கொண்டிருக்கின்றன!

அந்தத் தாய் வாயைத் திறப்பதற்கு முன்னர் மகள் பேசினாள் "ஓம் ஐயா நாங்கள் தருகின்றோம், ஆனால் அப்படியே கொண்டு தந்து விட வேண்டும் . "பவுத்திரம் புள்ள" "அம்மா நீங்கள் செய்கிற உதவியே போதும், நாங்கள் கண்காட்சி முடிந்ததும் அப்படியே உங்களிடம் கையளித்து விடுவோம். இந்தப் பொருட்களுக்குத்தானே எப்பவும் ஒரு தனி மதிப்பு இருக்கிறதே! இவைகள் புராதனச் சின்னங்கள் அம்மா! குருத்தோலை விழுந்தாலும் அதுவும் ஒரு நாளைக்கு மட்டையாக, கிடுகாக உயர்ந்துதானே நிற்கப் போகிறது. பிளாஸ்டிக் சாமான்கள் எத்தனை காலத்துக்கு? பிளாஸ்டிக் பிளாஸ்டிக் தான்! வெண்கலம் வெண்கலம் தான்! அந்தப் பெரியவரின் வார்த்தைகள் பிளாஸ்டிக் வட்டாவுக்கு புரிந்ததோ புரியவில்லையோ தெரியாது. அங்கிருந்த வெண்கலப் பொருட்கள் மோட்டார் வண்டியில் பவனி சென்று கொண்டிருந்தன. பிளாஸ்டிக் வட்டாவின் முகம் சுருங்கிப் போய் அசடு வழிந்தது. பழசு பழசுதான்! புதுசு புதுசுதான்!

- யாவும் கற்பனை -

என். கே. தயாளகுணசீலன்

# ஆரோக்கிய வாழ்வுக்கு...!!

## சமைத்த உணவைச் சுடவைத்தால் சத்துக் குறையுமா?



எந்த உணவையும் முதல் சூடு ஆறுவதற்கு முன்பே சாப்பிடுவதுதான் நல்லது. அப்போதுதான் முழுச்சத்தின் பலனும் நமக்குக் கிடைக்கும். உதாரணத்துக்கு கடைந்த பருப்புக் கீரையை எடுத்துக் கொள்வோம். கீரையில் விற்றமின் 'பி' யும் இரும்புச் சத்தும் அதிகமாக இருக்கிறது. பருப்பில் புரதம் அதிகம். பருப்புக் கீரையைச் சமைத்தவுடனே சாப்பிட்டால் இந்தச் சத்துக்கள் அப்படியே கிடைக்கும். அதே பருப்புக் கீரையைச் சமைத்து ஒரு மணி நேரம் கழித்துச் சாப்பிட்டாலே அதிலிருக்கும் சத்து கணிசமான அளவில் குறைந்து போய்விடும். நேரம் ஆக ஆக இந்தச் சத்துக்கள் இன்னும் குறைந்து கொண்டே வரும். காலையில் சமைத்த உணவை இரவு சாப்பிட்டால் எவ்வளவு சத்துக்கள் மிஞ்சும் என்று நீங்களே கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்.

அதிலும் குறிப்பாக முட்டை, பருப்பு வகைகள் பட்டாணி போன்ற புரதச் சத்து அதிகம் உள்ள உணவுப் பொருட்களில் கிருமிகள் இன்னும் வேகமாகப் பெருகிக் கொண்டே வரும்.

சாம்பார், குளம்பு, சோறு போன்றவற்றை அடிக்கடி குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பின் சுடவைப்பது அங்கு தங்கியிருக்கும் கிருமிகளுக்கு மிகவும் கொண்டாட்டமான விசயம். உரம் போட்டதுபோல் செழித்து வளரும். அதனால் மறுபடி சமைக்க இயலாதவர்கள் ஒன்றாக ஒரே தடவையில் எடுத்துச் சுடவைத்துச் சாப்பிட்டுவிடுங்கள். ஏதோ குறைந்த பாதிப்போடு போய்விடும்.

தோடம் பழச்சாற்றைக்கூட மிக்சியில் இட்டுத் தயாரிக்கும் போது பழத்தில் இருக்கும் நொதிகளும், சத்துக்களும் உருக்குலைந்து போகும். அதனால் பழத்திலிருக்கும் முழுச்சத்தையும் பெற முடியாமல் போகிறது. தவிர பழச்சாறு சீக்கிரமே கெட்டும் போகும். பழச்சாறு பிழிந்த உடன் உடனே குடித்துவிடுங்கள். அப்போதுதான் அதில் மிச்சமிருக்கும் சிறிதளவு சத்துக்களாவது கிடைக்கும். குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் குடித்தால் அந்தச் சிறிதளவு சத்தும் அழிந்துவிடும்.

- டாக்டர் கு. கணேசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் கல்வி வளர்ச்சியில் கத்தோலிக்க திருச்சபையினரின் பங்கு அளப்பரியது. குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளின் கல்விப்பணியில் திருச் சபையினரின் ஆற்றுப்படுத்தல் மிகவும் போற்றுதற்குரியது. இவற்றின் அடையாளமாக கத்தோலிக்கப் பாடசாலைகள் இன்றும் எமது பகுதிகளில் பணிபுரிகின்றன.

இவ்வகையில் இயேசு சபைக்குருக்களின் கல்விப்பணிகள் இவ்விடத்தில் ஈண்டு குறிப்பிடத் தக்கன. தற்போது சுதேசக்குருக்களே அதிகளவில் காணப்படும் இயேசு சபையில் காலத்திற்குக்காலம் இந்தியாவில் இருந்தும் குருக்கள் இலங்கை வந்து பணிபுரிகின்றனர். இவ்வரிசையில் அருட்பணி. எஸ். எம். பீலிக்ஸ் (யே.ச) அடிகளார் அவர்கள் சுமார் மூன்று ஆண்டுகள் இலங்கையில் ஆன்மீகக் கல்விப் பணிகள் புரிந்த பின்னர் இவ்வாண்டு ஜூலை மாதம் 29ம் நாளன்று தாயகம் திரும்பினார்

அண்மையில், அவரைத் தொண்டனின் சில நிமிடங்களுக்காகச் செவ்வி கண்டோம்.

**❖ அருட்பணி அவர்களே, உங்களின் சொந்த இடம், பெற்றோர் போன்ற விபரங்களைச் கூறுவீர்களா?**

✓ நான் பிறந்த இடம் தமிழ்நாட்டில் உள்ள சிவகங்கை மாவட்டத்தின் கீழ்வரும் சூராணம் என்னும் கிராமம். நான் 1940ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதியன்று பிறந்தேன் எனது தகப்பனார் பெயர் சவரிமுத்து. கனிஷ்ட பாடசாலையொன்றின் ஆசிரியர். இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். நான் 5ம் வகுப்புவரை தேவகோட்டையிலும் பின்னர் இயேசு சபை உயர்நிலைப் பள்ளியிலும் கற்றேன். தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகப் பாடநெறிகளைக் கற்கும் வாய்ப்பையும் பெற்றேன்.

**❖ இயேசு சபையில் சேர வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?**

✓ எனது மாமாக்கள் சிலர் குருக்களாக இருந்தனர். அத்துடன் இயேசு சபையின் பாடசாலைகளில் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றதாலும் அதன் பால் கவரப்பட்டேன், அத்துடன் எங்கள் மதுரை மறை மாவட்டத்தின் பாதுகாவலராக யேசு சபையின் புனித அருளானந்தரே இருந்தார். பி.எஸ்.ஸி. முடித்தபின், குருமடத்தில் இணைந்தேன். பின் புனித யோசப் கல்லூரியில் எம். எஸ். சி. பட்டம் பெற்றேன், அத்துடன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் எம்.ஏ. பட்டம் பெற்றேன். தொடர்ந்து மதுரைப் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் கலாநிதி (டாக்டர்) பட்டம் பெற்றேன்

**❖ உங்கள் பணிகள் என்னவாக இருந்தன?**

✓ ஏராளமான இடங்களில் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளேன். கல்லூரிகளில் விடுதிகளுக்குப் பொறுப்பாளராக இருந்துள்ளேன். உப அதிபராக, அதிபராக, இயக்குனராக எல்லாம் பணியாற்றியுள்ளேன். பாளையங்கோட்டை, திருச்சி, வடஇந்தியா, சென்னை போன்ற இடங்களில் எல்லாம் சேவையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்போது இலங்கை மக்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன்

**❖ இலங்கையில் உங்கள் பணிகள், அனுபவம் பற்றி சில வார்த்தைகள் கூறுங்களேன்**

✓ இயேசு சபையின் பணிகளில் ஈடுபட இலங்கைக்கு அனுப்பப்பட்டேன். பங்குத் திருப்பலியுடன், தியானங்களை நடத்துதல், குருக்களுக்கு வழி காட்டுதல், மாணவர்களுக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் என்ற சேவையை வழங்குதல், கிழக்குப்பல்கலைகழகத்தில் கணிதத்துறையை விசேட பாடமாக எடுக்கும் மாணவர்கட்கான விரிவுரைகளை நடத்துதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டுள்ளேன்.

**❖ இலங்கைக்கல்வி முறைக்கும் இந்தியக்கல்வி முறைக்கும் இடையேயான வேறுபாடு பற்றிக் கூறுவீர்களா?**

✓ இலங்கையில் பதின்மூன்று வருடங்கள் கற்றால்தான் பல்கலைக்கழக வாய்ப்பு, ஆனால் இந்தியாவில் இது ஒர் ஆண்டால் குறைவு. இந்தியாவில் ஆங்கிலக் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் க.பொ.த (சா.த)ல் 10 பாடங்கள் உண்டு. ஆனால் எஸ்.எஸ்.எல்.சி யில் 5பாடங்கள்தான் பிரதானம். ஐந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைந்தால் மட்டுமே தொடர்ந்து +2 படிக்கலாம். இந்தியாவில் 6 மாதங்கட்கு ஒரு தடவை பொதுப்பரீட்சை உண்டு

❖ **பொதுவாக வேறு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

✓ தொழில்சார் கல்வியை மாணவர்கட்கு கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். இதற்காகப் பொருத்தமான தொழில்சார் பாட நெறிகள் ஆரம்பிக்கப் படவேண்டியது மிகவும் அவசியம். இயேசு சபையினர் கூட இவ்வாறான பாடநெறிகளை ஆரம்பிக்கலாம்.

இறுதியில் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றோம்

**-ஆழியோன்-**

# நோய் ஆரணமாகத் குணமாயிற்று



"அழுகையோடு அவர்கள் திரும்பி வருவார்கள். ஆறுதல் அளித்து அவர்களை நான் அழைத்து வருவேன். நீரோடைகள் ஓரமாக அவர்களை நான் நடத்திச் செல்வேன். இடறி விழாதவாறு சீரான வழியில் அவர்களை நடக்கச் செய்வேன். ஏனெனில் நான் இஸ்ரயேலின் தந்தை" (ஏரே 3:1-9)

என் பெயர் பிரபா. நான் மட்டுநகரைச் சேர்ந்தவள். நான் கிறீஸ்தவ சமயத்தை சேர்ந்தவளல்ல. எங்கள் குடும்பத்தில் மாறி மாறிப் பல தாங்க முடியாத துன்பங்கள் ஏற்பட்டன. ஈற்றில் எனக்கும் நோய் ஏற்பட்டது. தலை கால் விறைப்பு, நெஞ்சடைப்பு, தலை நிமிரமுடியாது வேதனைப்பட்டேன். ஆறு வருடங்களாக இந் நோயினால் துன்பப்பட்டேன். ஆங்கில வைத்தியம் செய்தேன். தமிழ் வைத்தியம் செய்தேன். பணச் செலவொழிய நோய் குணமாகவில்லை. வைத்தியர்களும் கை விட்டார்கள். மரணத்தை எதிர் நோக்கினேன். என் இளமைப் பருவத்தில் நான் நோயினால் படும் துன்பத்தைக் கண்டு என் குடும்பத்தினர் தாங்க முடியாது கண்ணீர் வடித்தனர். இந்நிலையில் தினம் என் அன்னை என்னை அணுகி "மகளே! தேற்றாத்தீவு புனித யூதா திருத் தலத்தித்தில் அருட்பணி போல் றொபின்சன் அவர்கள் பல தீராத நோய்களைக் குணப்படுத்தி பல அற்புதங்களைச் செய்கின்றாராம், நீயும் அவ்வாலயத்திற்குப் போய்ப்பார்" எனக் கூறினார். அவ்வாறே அன்னையின் ஆணைக்கமைந்து, எனக்குப் பழக்கமானவர்களுடன் ஒரு சனிக்கிழமை புனித யூதாவின் திருத்தலத்தை நாடிச் சென்றேன். சனம் நிறைந்திருந்தது. நானும் அவர்களுக்குள்ளாக நுழைந்து ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டேன். பல போதகர்கள், பாடல்கள், வேதாகம வசனங்கள் போன்றவற்றால் இறைவனைப் புகழ்ந்து ஆராதித்து நன்றி சொல்லிக் கொண்டிருந்தனர். அதற்கு முன்னர் பாடகர் குழாம் செவிக்கினிய கீதங்களை இசைத்துக் கொண்டிருந்தது.

4.30 மணிபோல் வெளியே நின்றுகொண்டிருந்த மக்களெல்லாம் உள்ளே இடித்துக் கொண்டு வந்து நுழைந்தனர். எனக்குத் தலை நிமிர முடியாமல் இருந்ததினால் அங்கு நான் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த அருட்பணி போல் றொபின்சன் அவர்களை கண்ணால் பார்க்க முடியாதிருந்தும் அவரின் இனிய போதனையை இமைகொட்டாமல் கேட்டேன்.

"நான் உனக்கு நலம் அளிப்பேன் உன்னுடைய காயங்களை ஆற்றுவேன்". (ஏரே 30: 17) என வேதாகமத்தில் இருந்து அருள்வாக்கை ஆணித்தரமாகவும், அற்புதமாகவும் பொழிந்தார். உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேளுங்கள். "ஆண்டவர் எகிப்தியரை வதைப்பார். வதைத்துக் குணமாக்குவார். அவர்களும் ஆண்ட வரிடம் திரும்புவர்". (எசா 19:22) என்றெல்லாம் தந்தை அருள் வாக்குரைத்தார். அமைதியான உள்ளத்தோடு அருகிலிருந்து கேட்டு என் பாவ வாழ்க்கையையும் துன்ப துயரங்களையும் எண்ணி, கண்ணீர் சிந்திக் கதறி அழுதேன். என் உள்ளம் உருகியது. குணமளிக்கும் ஆராதனைச் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அருட்பணி போல் றொபின்சன் அவர்கள் ஆண்டவரை வேண்டிக் கொண்டிருந்தார். என்ன அற்புதம்! என்ன அதிசயம்! குனிந்திருந்த என் தலை நிமிர்ந்தது. கைகால் விறைப்பு நீங்கியது. நெஞ்சடைப்புக் குறைந்தது. என் வேதனையும் குறைந்தது. திருப்பலியின் பின்னர் தந்தையின் கரங்களால் ஆசி பெற்றேன். மன மகிழ்வுடன் இல்லமேகினேன். என் குடும்பத்தினர் குதூகலித்தனர். அன்றிலிருந்து இன்றுவரை சனிக்கிழமை தோறும் கையில் வேதாகமத்துடன் புனித யூதா ஆலயம் சென்று குணமளிக்கும் ஆராதனையிலும், திருப்பலியிலும் பங்கு கொண்டு வருகின்றேன். இப்பொழுது நான் பூரண குணமாகி விட்டேன். என் குடும்பத்தினரும் இவ்வழிபாட்டில் பங்கு கொள்கின்றார்கள். கத்தோலிக்க சமயத்தில் நானும் சேர்ந்து கடவுளின் அருள் வாக்கை அதிகமாகப் படித்தறிய வேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளேன்.

**பிரபா, மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையவர்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

- அவர்களிடம் அன்பு செலுத்துங்கள். அவர்கள் இன்னும்கூட ஓர் அன்பான தொடுதல், அணைப்பு, முத்தம், அன்பான சொற்கள் மற்றும் அன்பின் வெகுமதிகளுக்கு ஏங்குகிறவர்களாகவே இருக்கிறார்கள்.
- அவர்களுக்குச் செவி கொடுங்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மேல் கவனம் செலுத்தாத அளவு அலைச்சலுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது உலகம் முழுவதும் எழும் பொதுவான குற்றச்சாட்டாகும். அவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ள அவர்களுக்குச் செவி கொடுங்கள்: வீண் விவாதம் செய்ய வேண்டாம். ஒன்று சேர்ந்து பல விஷயங்களை அலசி ஆராயுங்கள். அவர்கள் விரும்புவது மதிப்பு, மரியாதை, மற்றும் அங்கீகாரம் ஆகியவையே.
- அவர்கள் மேல் நம்பிக்கை வையுங்கள். அவர்களுக்கும் சில பொறுப்புக்களைத் தருவதன் மூலம்அவர்களைப் பெரியவர்களாகவே நடத்துங்கள். அவர்கள் தவறு செய்யும் பொழுது அவர்களுக்கு மனக் கசப்பை உண்டாக்க வேண்டாம். அதற்கு மாறாக அவர்களுக்கு இன்னொரு வாய்ப்பு அளிப்பதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்துங்கள். உங்கள் பிள்ளை உங்களைப் போல் நீண்ட அனுபவ அறிவைக் குவித்து வைத்திருக்க வாய்ப்பில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- அவர்கள் தாமாகவே முடிவுகளை எடுக்க உதவி செய்யுங்கள். உங்கள் மேற்பார்வை இல்லாத நிலையிலும் அவர்கள் எதையும் எதிர்கொள்ள உதவி செய்யுங்கள். இது அவர்களது சுதந்திர உணர்வு பற்றிய ஐயத்தை நீக்கப் படிப்படியாகத் துணை செய்யும்.
- அவர்களை நேருக்கு நேர் பார்க்க முயலுங்கள். நீங்களும் ஒரு காலத்தில் அவர்களைப் போல் விடலைகளாக இருந்தவர்களே என்பதை நினைவில் வையுங்கள். அவர்களுக்கு நற்பழக்கங்களைக் கற்றுக் கொடுங்கள். சிறப்பாக உடை உடுத்தவும், தூய்மையாக இருக்கவும் கற்பியுங்கள். தங்களை யாரும் கவனிக்கவில்லையே என்று பரபரக்க வேண்டிய அவசியமில்லை என்பதைப் புரிந்துகொள்ள அவர்களுக்குத் துணை நில்லுங்கள்.
- அவர்களை அதிகாரம் செய்ய வேண்டாம். ஒரு வேலையைச் செய்ய வேண்டுமென்றால் அவர்களைக் கண்ணியமான முறையில் கேளுங்கள்.
- தனியாக இருக்கும் போதோ மற்றவர்கள் எதிரிலோ அவர்களைப் பற்றிக் கத்த வேண்டாம்.
- அடிக்காதீர்கள். அது ஒருபோதும் உதவாது. அது அவர்களைக் கசப்படையச் செய்யும்: அமைதி யற்றவர்களாக ஆக்கும்.
- மற்றவர்கள் முன் - குறிப்பாக நண்பர்கள் முன் அவர்களைக் குத்திக் காட்டவோ தாழ்த்திப் பேசவோ வேண்டாம்.
- அவர்களிடம் பொய் சொல்லாதீர்கள். அவர்கள் அதைக் கண்டு கொள்ளும்போது அவர்கள் உங்கள் மேல் வைத்துள்ள நம்பிக்கையை இழப்பார்கள். பிற்பாடு உங்கள் மேல் மதிப்பு வைக்க மனம் வராது.
- அவர்கள் முன்னிலையில் சண்டை போட வேண்டாம். நீங்கள் சண்டை போடுவதை அவர்கள் விரும்புவதில்லை. அது அவர்களை எரிச்சலடையச் செய்யும்: உங்களைக் குறித்து வெட்கப்படவே செய்வார்கள்.
- ஒரு சார்புடையவர்களாக இருக்க வேண்டாம். இது அவர்களைப் பொறாமை உள்ளவர்களாக ஆக்கும்.
- உங்கள் பிள்ளையை வேறொரு பிள்ளையுடனோ அல்லது அவனது சொந்த சகோதர சகோதரிகளுடனோ கூட ஒப்பிட வேண்டாம். இதனால் உங்களையும் தன் சகோதர சகோதரிகளையும் நேசிக்கமாட்டான்.
- சின்னஞ் சிறு விஷயத்திற்கெல்லாம் தாவிப்பிடித்து அடித்து நொருக்க எப்போதும் தயாராக இருக்கும் போலீஸ்காரராக இருக்க வேண்டாம்.
- உளவு வேலை எல்லாம் பார்க்க வேண்டாம். அவர்கள் தனிமையை விரும்புகின்றனர்.
- அவர்களைப் பொத்திப் பொத்தி பாதுகாக்க முனையாதீர்கள். அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள முடியும்.
- பக்த சிரோன்மணிகளாக இருக்க வேண்டுமென்று அவர்களை எந்நேரமும் கட்டாயப்படுத்தி தொணதொணக்க வேண்டாம். நீங்களே சிறந்த பக்தி வாழ்வை நடத்திக் காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழிக்கு 'செம்மொழி' அந்தஸ்து

இந்தியாவில் கடந்த மே மாதத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தனது குறைந்த பட்ச செயல் திட்டத்தில் (Common Minimum Programme) தமிழைச் செம் மொழியாக மத்திய அரசு ஏற்குமென அறிவித்துள்ளது. இச்செய்தியானது உலகமெங்கும் பரந்து வாழும் ஒட்டுமொத்தத் தமிழ் சமூகத்துக்கும் மகிழ்வினை அளித்துள்ளது.

தமிழ் 'செம்மொழி' யாக மாற்றப்படுவதனால் தமிழ்ச் சமூகத்திற்கு விளையும் நன்மைகள் என்னவென்பதைத் 'தொண்டன்' வாசகர்களும் அறியும் வண்ணம் தமிழ் அறிஞர் மணவை முஸ்தபா அவர்கள் கடந்த 09.06.2004 அன்று ஜூனியர் விகடன் சஞ்சிகையில் எழுதிய கட்டுரையைத் தொகுத்துத் தருகின்றேன்.

ஒரு மொழி செம்மொழியென அறிவிக்கப்பட பதினொரு தகுதிப்பாடுகள் இருக்கவேண்டும். அவை முறையே:

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமைப் பண்பு
4. நடுவுநிலைமை
5. தாய்மைத்தன்மை
6. பண்பாட்டு, கலை பட்டறிவு வெளிப்பாடு
7. பிறமொழித் தாக்கமிலா தனித்தன்மை
8. இலக்கிய வளம்
9. உயர் சிந்தனை
10. கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
11. மொழிக் கோட்பாடு,

மொழியியலாளரின் கருத்துப்படி, ஏற்கெனவே செம்மொழிகளாகவுள்ளள சமஸ்கிருதத்துக்கு ஏழு தகுதிப்பாடுகளும், கிரேக்கம், இலத்தீன் என்பன வற்றிற்கு எட்டுத் தகுதிப்பாடுகளே உள்ளன. ஆனால் தமிழுக்கு மாத்திரமே இந்தப் பதினொரு தகுதிப் பாடுகளும் பொருந்துவனவாக உள்ளன.

இவ்வாறு அனைத்துத் தகுதிகளையும் கொண்ட தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்படும் பட்சத்தில் கிடைக்கப்பெறும் நன்மைகள் எவையென நோக்குமிடத்து:

1. தமிழை இந்திய மத்திய அரசு செம்மொழியாக அங்கீகரிக்குமிடத்து, அதனை இந்தியப் பல்கலைக் கழக மானியக்குழுவும் அங்கீகரிக்கும். அதனை உலகப் பல்கலைக் கழகங்களும் ஏற்றுக்கொள்ளும். இதனால் இதுவரை காலமும் பல்கலைக் கழகங்களில் சமஸ்கிருதத் துறையின் ஒரு பகுதியாகவோ அல்லது கீழ்த்திசை மொழிகளில் ஒன்றாகவோ கருதப்பட்டு வந்த தமிழ் தனக்கென உலகப் பல்கலைக் கழகங்களில் தனித்துறைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

2. இங்கெல்லாம் தமிழ் கற்பிக்கப்படுவதோடு, ஆய்வாளர்களால் தமிழ் ஆய்வுகளும் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டாகும். தமிழைக் குறித்து புதிய பல ஆய்வு முடிவுகள் வெளிவரும். இதனால் பல புதிய தமிழியல் பரிமாணங்கள் வெளிப்பட்டு தமிழ் மாண்புறும்.

3. உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர்களும், விசேடமாக, ஈழத்தமிழர்கள் தமிழில் ஆய்வுகளை மேற்கொள்ள இச்சூழல் வாய்ப்பாக அமையும்.

4. உலக நாடுகள் தமிழ் மொழியை அங்கீகரிப்பதுடன் மட்டுமல்லாது அதனது வளர்ச்சிக்கு உறுதுணை யாக இருக்கும் சூழலும் உருவாகும்.

5. தமிழ்மொழி, கலை, இலக்கிய பண்பாட்டு வளர்ச்சிக்கும், ஆய்வுகளுக்கும் யுனெஸ்கோ போன்ற பன்னாட்டு அமைப்பும், ஃபோர்ட் பவுண்டேசன் போன்ற நிறுவனமும், இன்னும் பல தனியார் தொண்டு நிறுவனங்களும் உதவி செய்ய முன்வரும், அதன் விளைவாக தமிழ் ஆய்வு புதிய பரிமாணத்தை எட்டும்.

6. செம்மொழி என்கின்ற தரத்தில் தமிழ்ப் படைப்புக்கள் உலகமொழிகளில் பரவலாக மொழிபெயர்க்கப்படும். தமிழ் - ஆங்கில அகராதித் தொகுப்புக்கள் உருவாக வாய்ப்புக்கள் பெருகும்.

7. செம்மொழி அந்தஸ்தானது தாய்மொழிக் கல்விக்கு உகந்த அத்திவாரமாக மாறும். உலகமெங்கும் தமிழ்மொழி ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது தமிழ் நாட்டில் மாத்திரம் ஆங்கில மோகம் வாட்டி வதைக்கின்றது.

இவ்விடத்தில் கடந்த 01.08.2004 அன்று ஜூனியர் விகடன் சஞ்சிகையில் 'இது சிறகுகளின் நேரம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் தொடர்ப்பகுதியில் எழுதிவரும் தமிழ்ப் பேராசிரியர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் கூற்றினை எடுத்துரைப்பது சாலத்தகுமென கருதுகின்றேன்.

தமிழ்மொழி செம்மொழியாக மாற்றப் படுவதனால் தமிழுக்குப் பயனென்ன என்று சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள். இவ்வாறு கேள்வி எழுப்புகின்றவர்கள் தமிழின விரோதிகளாயிருந்தால் பரவாயில்லை, மாறாக தமிழர்களே கேட்கும்போது எப்படியிருக்கும்! அவருடைய ஆதங்கத்தினை பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்: "மாநில மொழியே கற்காமல் முதுகலைப் பட்டம்வரை பெறக்கூடிய மாநிலம் உலகத்திலயே தமிழ்நாடுதான், 'தாய் மொழியில் கற்க மாட்டோம்' என்று கூறி வழக்குத் தொடர்ந்த இனம் உலகத்திலேயே தமிழ் இனம் ஒன்றுதான்" மேலும் தம்மை அமெரிக்காவில் சந்தித்த தமிழர் ஒருவர் கூறியதைக் கூறிவிட்டு அதற்கு அவர் பதிலும் கொடுக்கின்றார். "இந்தக் காலத்தில் தமிழ், தாய்மொழி என்றெல்லாம் பேசுவது பொருத்தமற்றது. இப்போது உலகம் ஒன்றாகிக் கொண்டிருக்கின்றது"

பதில்: "நீங்கள் என்னதான் ஆங்கிலம் பேசிக் கொண்டு அமெரிக்காவிலேயே வசித்தாலும் அமெரிக்கர்கள் உங்களை அமெரிக்கர்களாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழின அடை யாளத்தை நீங்கள் மெல்ல மெல்லக் கைவிட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். ஒரு காலம் வரும் அப்போது உங்களுக்கு முகவரியும் இருக்காது முகமும் இருக்காது. மொழிதான் ஒருவனுக்கு முகமும், முகவரியும். முகவரியும், முகமும் இல்லாதவனை உலகம் மதிக்காது". உலகப் பிரசித்தி பெற்ற நரம்பியல் வல்லுனர்களின் கூற்றுப்படி ஆரம்பக் கல்வி தாய் மொழியில் பெறும்போதுதான் கற்பவரின் சுயசிந்தனை ஊற்றுக்கண் திறக்கப்படும். இதனையே யுனெஸ்கோ நிறுவனமும் வலியுறுத்துகின்றது. "எந்த நாடாக இருந்தாலும், எந்தச் சூழலில் இருந்தாலும் ஆரம்பக் கல்வி ஐந்தாண்டுகள் அவரவர் தாய் மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டும். அப்போது தான் கற்பவரின் சுயசிந்தனை ஊற்றுக்கண் திறக்கப்படும் என்று அதன் கல்விக் கொள்கையில் குறிப்பிட்டுள்ளது.

8. அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு செம்மொழி அங்கீகாரம் பெரும் வரப்பிரசாதமாகும். கலைச் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு, அறிவியல் படைப்பிலக்கிய உருவாக்கம் தொடர்பான புதிய புதிய உத்திகளை வகுத்துச் செயல்பட பெரும் வாய்ப்பாக அமையும்.

9. இன்னும் சொல்லப் போனால், இன்றைய இன்றியமையாத் தேவையான 'தமிழ்ப் புத்தி லக்கணம்' உருவாக வழி ஏற்படும். எனவே தமிழ் 'செம்மொழி'எனும் அறிவிப்பு தமிழ் வளர்ச்சிக்கு இன்னுமொரு மைற்கல்லே.

**அருட்தந்தை. அகஸ்தீன் நவரெத்தினம்** (நவாஜி)
*M.A.M. Phil, சென்னைப் பல்கலைக்கழகம்.*

## மாற்றம் வேண்டும்

*உள்ளத்தில் மாற்றம் வேண்டும். - என்*
*உறவுகளில் நேசம் வேண்டும்.*
*மகிமையின் தேவன் உம்மை - நித்தம்*
*மனதில் ஏற்ற வேண்டும்.*

*வளமான வாழ்வு காண - எனக்கு*
*வழிகாட்ட வாருமையா!*
*நற்செய்தி உட்பொருளாய் - நாளும்*
*நடந்திட அருளையா!*

*விரிசலான பாதை வழியே - நானும்*
*விரைந்து சென்று அழிவதோ*
*இடுக்கமான பாதை விரும்பி - நாளும்*
*இன்பவழி செல்வேனே!*

*பணத்திலே பற்றுக்கொண்டு - பிறர்*
*பாசத்தை மறப்பதேனோ*
*நலிந்தவர் நொந்தவர் - என்றும்*
*நலமாக அருள் தாரும்!*

**யாழ் ராதவல்லி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமையான இயற்கை மருத்துவம்

நோய்வராமல் பாதுகாக்க உடல் உறுப்புக்களுக்கு அளவோடு வேலை கொடுப்பது, அளவோடு உண்பது, குடிப்பது அவசியமாகும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்த அளவில் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய பொன்மொழி. உடலின் உள்ளுறுப்புக்களும் சரி, வெளி உறுப்புக்களும் சரி ஓய்வில்லாமல் வேலை செய்தால் அவை விரைவில் பழுதாகி நோயாளியாக்கிவிடும். சுவையான உணவு என்பதற்காக வயிறு நிறைய உண்பவர்களும், அடிக்கடி உண்பவர்களும் தம்மை நோய்களுக்கே உணவாக்குகின்றனர். "ஒரு வேளை உண்பவன் யோகி: இருவேளை உண்பவன் போகி: மூவேளை உண்பவன் ரோகி. பசித்துப் புசிப்பதும், அளவறிந்து உண்பதும் நீண்ட ஆயுளைத் தரும்" என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

நோய் வருவதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. நமது உடலில் உள்ள உயிராற்றல் பலமிழக்கும் போது நோய்கள் வந்து சேர்கின்றன. அவ்வாறு பலமிழப்பதற்கு சத்துக்குறைபாடு, சுகாதார மற்ற பழக்கவழக்கங்கள், உடல் உறுப்புகளுக்கு அதிகப்படியான வேலை, சூழல் மாசடைதல், மனக் கவலை இவ்வாறான பல காரணங்களால் நமது உடலில் உள்ள உயிர்ச்சக்தி பாதிக்கப்பட்டு பலவித நோய்கள் உண்டாகின்றன.

நோய் வந்ததும் அதற்காக நாம் உட்கொள்ளும் நவீன மருந்துகள் நோயை முற்றாகக் குணப்படுத்துகிறதோ என்னவோ பல்வேறு பக்க விளைவுகளை உண்டாக்கி விடுவதோடு, கடன் காரராக்கியும் விடுகின்றது. இறுதியில் பணத்தைக் கொட்டி நோய்களை வாங்கிக் கொள்வதுதான் மிச்சம். தொடர்ந்து மருந்துகளைப் பாவித்து வருபவர்களுக்கு குடற்புண், நரம்புத் தளர்ச்சி, விறைப்பு போன்ற பல நோய்கள் ஏற்படுவதோடு, இரசாயன மருந்துகளால் உடலில் சிறுகச் சிறுக நச்சுத்தன்மையும் சேர்ந்து விடுகிறது. இதனால் ஏற்படும் பாதிப்புக்களோ ஏராளம்.

நமது முன்னோர் இயற்கையான உணவுகளை உண்டு நோயின்றி வாழ்ந்தனர். எப்போதாவது நோய் வந்தாலும் இயற்கையான, எளிமையான சிகிச்சைகளால் குணமாக்கிக் கொண்டனர். இன்று இயற்கையான உணவுகளுமில்லை, எளிமையான சிகிச்சைகளுமில்லை. செயற்கையான வாழ்க்கை முறையால் கொண்டாட்டம் நோய்களுக்குத்தான்.

எப்போதோ, எங்கோ கேட்ட நோய்களெல்லாம் இன்று வீட்டுக்கு வீடு குடியேறிவிட்டன. சிறிய நோயாக இருந்தாலும் கூட உடனே மருத்துவமனைக்கு ஓடிச் செல்வதும், மருத்துவர் சுளையாக 300/=, 400/= ரூபாவைக் கறந்து விட்டு கொட்டிக் கொடுக்கும் மாத்திரைகளையும், மருந்துகளையும் வாங்கி வாரக்கணக்காக, மாதக் கணக்காக விழுங்குவதும், அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட் என்று ஐநூறு ஆயிரமாகச் செல வழிப்பதும் இன்று வாடிக்கையாகிவிட்டது. இந்த டெஸ்ட்டுக்கள் கூட மருத்துவமனைக்கு மருத்துவமனை குளறுபடியாகி தலைநகரை நோக்கிப் படை எடுப்பவர்கள் ஏராளம்.

இந்நிலையில் நோய்வராமல் தடுக்கவும், வந்த நோய்களை விரட்டவும் இயற்கையான எளிமையான மருந்துகளை எமது வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தவிருக்கின்றோம்.

இம்மருந்துகள் சித்தர்களால், முன்னோர்களால் கண்டு பிடிக்கப்பட்டு மக்கள் மத்தியில் பாவிக்கப்பட்டவை. புகழ் பெற்ற மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவை. இந்த எளிமையான, இயற்கையான மருந்துகள் உங்கள் நோய்களைக் குணப்படுத்தி ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியான வாழ்வையும் தரும் என்ற நம்பிக்கையோடு இவற்றை அறிமுகப்படுத்துகின்றோம்.

**இருமல்**

தொல்லை தரும் இருமலுக்கு கொஞ்சம் மாதுளம் பூ மொட்டுக்களை உலர்த்தி இடித்துப் பொடியாக்கி, தினந்தோறும் ஒரு சிட்டிகை அளவு உள்ளுக்குச் சாப்பிட்டால் போதும் இருமல் குணமாகும்

**இடைவிடாத இருமல்**

இடைவிடாத இருமலுக்கு அதிமதுரத்தைத் தூள் செய்து அதில் கொஞ்சம் எடுத்து தேனில் குழைத்து சாப்பிட்டால் போதும் இருமல் தணியும் தொண்டைக் கரகரப்பு இருந்தாலும் போய்விடும்.

**வேறு**

இடைவிடாத இருமலுக்கு இஞ்சியைத் தட்டி சாறு எடுத்து அத்துடன் அதே அளவு மாதுளம் பூவின் சாற்றையும் தேனையும் சேர்த்து கலக்கி காலை மாலை மூன்று நாள் விடாது சாப்பிட குணமாகும்.

**வேறு**

இடைவிடாத இருமல், தொல்லை கொடுக்குமானால் மிளகு, லவங்கம், இரண்டையும் வறுத்து பொடி செய்து கருப்பு வெற்றிலையுடன் சேர்த்துச் சாப்பிடவும்

**வறட்சி இருமல்**

அதிகாலையில் இருமல் இருந்தால் கொஞ்சம் கடுகை எடுத்து நான்றாக அரைத்து ஒரு சிட்டி கைத் தூளில் தேன்விட்டு கலந்து சாப்பிடக் குணமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

புகைந்து வரும் இருமலுக்கு, ஒரு கரண்டி எலுமிச்சம் பழச்சாற்றுடன் அதே அளவு தேன் கலந்து சாப்பிட்டால் போதும் வறட்சி இருமல் தணிந்து விடும்

**இருமல் சளிக்கு**

இடைவிடாத இருமலும் சளியின் தொல்லையும் இருந்தால் சிற்றரத்தை இலையை எடுத்து கஷாயம் போட்டக் குடித்தால் போதும். ஒரு சிற்றரத்தையை வாயில் போட்டு அடக்கிக்கொண்டு அதன் சாற்றை விழுங்கினாலும் கூட இருமலும் சளியும் குறையும்.

**கக்குவான் இருமல்**

கக்குவான் இருமலுக்கு வீட்டு வைத்தியமாக அலுமினியப் பாத்திரத்தில் படிகாரத்தைப் பொடித்து வைத்துக் கொண்டு வேளைக்கு இரண்டு குன்றுமணி அளவு எடுத்து வெந்நீரில் கலக்கி நாள் ஒன்றுக்கு மூன்று வேளை வீதம் ஐந்தாறு நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர இருமல் குணமாகும்.

இயற்கை மருத்துவம் இனிவரும் இதழ்களிலும்

தொடரும்...

-சித்தன்-

# வெற்றியின் சின்னம் சிலுவை




80,000 படைவீரரோடு துருக்கியர்கள் கிறிஸ்தவ நாடுகளில் படையெடுத்து வந்தபோது 18,000 கிறிஸ்தவப் போர் வீரர்களைக் கொண்டு சிலுவையைக் கையிலேந்தி தலைமை தாங்கி மாபெரும் வெற்றியைக் கிறிஸ்தவர்களுக்குப் பெற்றுத் தந்தார் பிரின்சிலாறன்ஸ் என்ற புனிதர். சிலுவை வெற்றியின் சின்னமாகத் திகழ்கின்றது.

கிறிஸ்தவர்களின் வாழ்க்கைப் பயணத்தில் சிலுவை என்ற வெற்றியின் சின்னம் நடப்பட்டிருக்கும். அதாவது சிலுவை என்ற நம்பிக்கையின் மரம் வாழ்க்கைப் பயணத்தில் துன்பம் என்ற பாதையில் நடந்து, துயரம் என்ற சோர்வு ஏற்படும்போது, கவலையால் கால்கள் தள்ளாடி நடக்கப் பலமில்லாதபோது, உற்றார், உறவினர் நண்பர்களால் மறுதலிக்கப்பட்டு, மறக்கப்பட்டு இகழ்ச்சி என்ற வெப்பம் தாக்கும்போது, தோல்வியைச் சந்தித்து வேதனையின் விளிம்பில் நிற்கும் நெஞ்சத்திற்கு ஆறுதலும் அரவணைப்பும் கொடுக்கும் நிழல்தான் சிலுவை. விரக்தி அடைந்த மனத்திற்கு வீசும் தென்றலாக, சிறுமை அடைந்த மனிதன் சிக்கல் நிறைந்த வாழ்வோடு சிலுவையை உற்று நோக்கிப் பார்க்கும்போது சிந்தையைக் குளிரச் செய்வதுதான் சிலுவை. இது கிறிஸ்தவர்களின் புனிதச் சின்னம்; வெற்றியின் சின்னம். வாழ்க்கைப் பயணத்தில் அலகை என்னும் பாம்பினால் வஞ்சிக்கப் பட்டவர்கள் சிலுவையில் உயர்த்தப்பட்ட கடவுளின் மகனை உற்று நோக்கினால் நலமடைவர். வெண்கலப் பாம்பு புது வாழ்வின் அடையாளம். மானிட மீட்புக்காக இறைமகன் கொணர்ந்த சிலுவையும் புது வாழ்வின் அடையாளம்.

சிலுவை இல்லாமல் இயேசு மட்டும் வேண்டும் என்று பகுத்தறிவாளர் சொல்வர். இயேசு இல்லாத சிலுவை மட்டும் வேண்டும் என்று பழமைவாதிகள் சொல்வர்.

சிலுவை இல்லாத கிறீஸ்து என் மீட்பராக இருக்க முடியாது என்று உண்மையான கிறீஸ்தவர் சொல்வர்.

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்று இயேசு திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். நமது குறிக்கோளை நாம் அடைய வேண்டும் என்றால் சிலுவையின் வழி நாம் நடக்க வேண்டும். சிலுவையைச் சுமப்பதில் உள்ள இனிமையை நாம் சுவைக்கும்போது இயேசுவின் பாடுகளில் பங்கு பெற்றவர்களாகிவிடுகின்றோம். அப்பொழுது உயிர்த்தெழுதலில், வெற்றியில், அவருடைய மகிமையில் பங்குபெறத் தகுதியுடைய வராகின்றோம்.

நன்றி - தோழன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## படைப்பின் வரலாறு

ஆதியாகமத்தில் முதல் 3 அதிகாரங்களிலும் படைப்பைப் பற்றிய இரு வரலாறுகள் காணப்படுகின்றன. முதல் வரலாறு ஆதி 1:1–2:3 இலும் இரண்டாம் வரலாறு ஆதி 2:4–3:24 இலும் காணப்படுகிறது. இவற்றில் முதல் படைப்பின் வரலாற்றினை எடுத்துக் கொள்வோம்.

## படைப்பின் முதல் வரலாறு (குரு மரபு)

இவ்வரலாறானது சட்டப் புத்தகத்தின் முன்னுரையாக ஜெருசலேமில் வாழ்ந்து வந்த ஒரு குருவினால் கி.மு.5ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென்று விவிலிய வல்லுனர்கள் இன்று ஏற்றுக் கொள்கின்றனர். இது குரு மரபில் எழுதப்பட்டுள்ளது. பபிலோனியரின் புராண இலக்கியத்தைத் தழுவி இஸ்ராயேல் வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டது. இஸ்ராயலர் 6 நாட்கள் வேலை செய்து 7ம் நாள் ஓய்வெடுத்தனர். அதுபோல் கடவுளும் ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாம் நாள் ஓய்வெடுத்ததாய் கூறப்பட்டுள்ளது.

பழங்கால மக்கள் உலகைக் கவிழ்த்து வைத்த கோப்பை போன்றது எனக்கருதினர் அடிக்கடி மழை பெய்வதால் மேலே தண்ணீர் உள்ளது என்றும் வானத்திலுள்ள நீரைப்பிரித்து கடவுள் மழை பெய்யச் செய்வதாகவும் நம்பினார்கள். விண்மீன்கள் வானத்தில் தொங்கிக் கொண்டிருப்தாகவும் ஏனைய மதத்தினர் நம்பினார்கள். இக்கருத்தையும் இஸ்ராயல் மக்களும் பகிர்ந்து கொண்டனர். இப்பாரம்பரியத்தினைப் பயன்படுத்திய ஆசிரியர் அறிவுரையும் அறவுரையும் கூறுகின்றார்

மற்றும் ஆசிரியர் தன்னைச் சுற்றியுள்ளோர் பயன் படுத்திய சொற்றொடர்களையும், பாரம்பரியங் களையும் பயன்படுத்தினாலும் அவர் சொல்ல வந்த உண்மைகள் ஏனையோர் கூறியதற்கு முற்றிலும் மாறானது. இஸ்ராயலைச் சுற்றியுள்ள நாடுகளில் வாழ்ந்த மக்கள் பல தெய்வங்களை வணங்கினார்கள். இயற்கையானதைக் கடவுளாகக் கருதினர். இயற்கையின் நிகழ்ச்சிகளான இடியும், மின்னலும், கடலும், விண்ணும், மண்ணும், சூரியன், சந்திரன் அனைத்தையும் கடவுளாக வணங்கினர் எனினும் ஆசிரியர், கடவுள் ஒருவரே இவ்வுலகைப் படைத்தவர், நித்தியர், ஆதிகாரணர், தற்செயலாக உலகிலிருந்து தோன்றியவரல்ல, உலகிற்கு அப்பாற்பட்டவர், உயிரளிப்பவர், ஆற்றலும், அறிவும் மிக்கவர், சர்வ வல்லமையுள்ளவர், வார்த்தையாலே அனைத்தையும் படைத்தவர், ஒரு சொல்லால் அனைத்தையும் அடக்கி ஆள்பவர், ஞாயிறும், திங்களும் அவரது ஆணையால் ஆக்கப்பட்டனவென்று தெளிவாக விளக்குகிறார்

பபிலோனிய புராணத்தின்படி கடவுளால் அடைத்து வைக்கப்பட்டிருந்த கொடிய விலங்குகளில் இருந்துதான் அனைத்து உலகப் பொருட்களும் உருவாகியது என்ற கருத்து நிலவியது. புராணங்களிலே கடவுள் ஆதி சக்தியுடன் போர் புரிந்து மிகவும் கஷ்டப்பட்டு அனைத்தையும் உண்டாக்கியதாகக் கூற, இங்கு கடவுள் எவ்வித கஷ்டமுமின்றி "உண்டாகட்டும்" என்ற ஒரு வார்த்தையால் அனைத் தையும் உண்டாக்கியதாகக் கூறி, இதனை வலியுறுத்த இவ் வார்த்தையை ஒவ்வொரு படைப்பிலும் கூறுவதாய் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மேலும் ஆசிரியர் பாமர மக்களின் மனதில் ஓய்வு நாளை வலியுறுத்த விரும்புகிறார். எனவே படைப்பை 7 நாட்களாகப் பிரித்து 7ம் நாளை ஓய்வு நாளாகக் குறிப்பிடுகிறார். 7,3 ஆகிய இலக்கங்களை நிறைவின் குறியாகப் குறித்துக் காட்டுகிறார். மற்றும் 6 நாட்களையும் இரண்டாகப் பிரித்து படைப்பிற்கு 3 நாட்களும், அவைகளின் அணி கலன்களுக்கு 3 நாள்களுமாக வடிவமைத்துக் காட்டுகின்றார்.

மனிதனின் மாண்பினை விளக்குவது இம் முதல் அதிகாரத்தின் முக்கிய குறிக்கோளாகும். எனவே எல்லாப்படைப்பையும் கூறிவிட்டு இறுதியில் மனிதப் படைப்பைப் பற்றி குறிப்பிடுகிறார். அனைத்தின் பின்னும் மனிதப் படைப்பினை நிறுத்துகிறார். மனிதனைப் படைக்கு முன் ஆலோசனை செய்ததாக சித்திரிக்கிறார் ஆசிரியர். மனிதன் படைப்பின் சிகரமாகவும் அரசனாகவும் காட்சியளிக்கிறான். மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைக்கின்றார். இருவரும் சம உரிமை உடையவர்கள், இருவகை பாலியல் அமைப்பு, கடவுளின் படைப்பே. இறைவனே முதல் திருமணத்தினை ஏற்படுத்துகிறார். இறைவனின் சாயல் என்பது மனிதன் பெற்றுள்ள பகுத்தறிவு, ஆளுமை, மாண்பு போன்றவற்றைக் குறிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் சொல்லைத் தட்டாதே

(சிறுவர் கதை)



கோழி ஒன்று அடைக்காத்துக் குஞ்சு பொரித்தது. குஞ்சுகள் வளர்ந்து பெரியவையாகின. எல்லா குஞ்சுகளும் அழகாகவும் நல்ல ஆரோக்கியமாகவும் இருந்தன. தாமே இரை தேடின, ஆனால் ஒரு குஞ்சு மட்டும் ஒரு கண், ஒரு கால் என்று அங்கக்குறையோடு இருந்தது. இதைப் பார்க்க தாய்க்கோழி கவலையடைந்தது. அடடா! இந்தக் குஞ்சு எப்படி வாழப் போகின்றது என்று அடிக்கடி கவலைப்பட்டுக் கொண்டது. இதனால் அந்த நொண்டிக் குஞ்சின் மேல் அதிகப் பாசம் செலுத்தியது. எங்கு போனாலும் தானே கூட்டிக் கொண்டு சென்றது; இரை தேடிக் கொடுத்தது.

இதைக் குஞ்சு அறிந்திருக்கவில்லை. அந்தக் குஞ்சு தன்குறையை அறியாதவாறு தாய்க் கோழி அதைப் பாதுகாத்ததால் குஞ்சு குறையை உணராமல் திமிராக வளர்ந்தது. மற்றக் குஞ்சுகளைக் கொத்தும். தாயோ, அதற்கு அனுதாபம் காட்டியது. மற்றக் குஞ்சுகளும் அதற்கு ஒன்றும் செய்யாமல் இருந்தன.

ஒருநாள் நொண்டிக் குஞ்சு தாயிடம் சென்றது. கையில் சிறு பொட்டலத்தைத் தடியில் கட்டி வைத்திருந்தது. "அம்மா என்னால் இனிமேல் இந்தக் கிராமத்தில் இருக்க முடியாது. நான் வாழ வேண்டிய இடம் இதுவல்ல. நான் அரசரிடம் போய் உதவி கேட்கப் போகின்றேன். அம்மா என்னை ஆசீர்வதியுங்கள்" என்று கேட்டது. தாய் அதிர்ந்தது. "உன்னால் அதிக தூரம் நொண்டி நொண்டி நடக்க முடியாது. அரண்மனை எங்கிருக்கின்றதோ எனக்குத் தெரியவில்லை. அப்படியிருக்க நீ தனியாகப் போவது நல்லதல்ல. நீ எங்களுடன் இருந்து விடு" என்று கூறியது.

ஆனால் குஞ்சுக் கோழி கேட்கவில்லை. பிடிவாதமாகப் போக வேண்டும் என்று கூறியது. அதனால் தாய்க் கோழி அரை மனதுடன் "சரி போய்விட்டு வா" என்று கூறியது. குஞ்சும் ஆவலுடன் போகத் தொடங்கியது. நீண்ட தூரம் நடந்து காட்டுப் பாதையை அடைந்தது. வழியில் அடர்ந்த மரங்களுள்ள இடத்தில் ஒரு மரத்தின் கிளைகள் காற்றினால் சிக்குப் பட்டுக் கிடந்தன. அந்த மரம் கோழியைப் பார்த்து "குஞ்சே நீ நல்லாயிருப்பாய். இந்தச் சிக்குப்பட்ட கிளைகளை எடுத்து சிக்கை நீக்கி விடு, உனக்கும் நான் ஒரு நாளைக்கு உதவுவேன். என்றது. குஞ்சு ஆணவம் கொண்டதல்லவா? அது "போ போ நான் அரண்மனைக்குப் போகின்றேன் எனக்கு நேரமில்லை" என்று நிற்காமல் நடந்தது.

அடுத்ததாக ஓரிடத்தில் நெருப்பு நூரும் தருவாயில் இருந்தது. நெருப்பு குஞ்சைப் பார்த்து "குஞ்சே நான் இறக்கப் போகின்றேன், என்னைக் காப்பாற்ற உன்னால் தான் முடியும், நீஊதி விட்டால் நான் பிழைத்து நன்றாக எரிவேன்" என்றது. அதற்கு குஞ்சு "போ போ எனக்கு நேரமில்லை, நான் அரண்மனைக்குப் போக வேண்டும், உனக்கெல்லாம் ஊதிக்கொண்டிருக்க முடியாது" என்று கூறிவிட்டு நிற்காமல் சென்றது.

எதிரே ஆறு அகப்பட்டது. அதில் நீரில் குப்பை, கூழங்கள் விழுந்து கிடந்ததனால் நீர் ஓட முடியாமல் கிடந்தது. நீர் குஞ்சைப் பார்த்து "குஞ்சே நீ நல்ல குஞ்சல்லவா? குப்பை கூழத்தை அகற்றி நான் ஓட வழி செய்து தா" என்றது. ஆனால் குஞ்சோ "போ, போ எனக்கு நேரமில்லை, நான் அரண்மனைக்குப் போக வேண்டும், அரசரை, அரசியை சந்திக்க வேண்டும்" என்று கூறியது.

அத்துடன் 'எனக்கு யார் உதவி செய்கிறீர்கள? நான் தானே கஷ்டப்பட்டு நடந்து அரண்மனைக்குப் போகின்றேன்' என்றது. அதற்கு நீர் 'எங்களால் முடிந்ததை நாம் செய்யலாம். முடியாததைச் செய்யக் கூடியவரிடம் கேட்டுப் பெறலாம், அதுதான் முறை' என்று கூறிக் குஞ்சைத் தன் வழிக்குக் கொண்டு வர எவ்வளவோ முயற்சி செய்தது, ஆனால் மசியவில்லை.

எத்தனை விவாதம் செய்தும் குஞ்சு ஒருவருக்கும் உதவி செய்யாமல் நகரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தது. அங்கு அரண்மனை போன்ற பெரிய மாளிகையைத் தேடித் தேடி அலைந்து கடைசியில் அரண்மனையினைக் கண்டது. காவலர்கள் ஈட்டி களை வைத்த வண்ணம் காவலுக்கு நின்றார்கள். ஆனால் அவர்கள் மேலே பார்த்த படி நின்றதனால் சிறிய குஞ்சைக் கவனிக்கவில்லை. ஆனால் அவர்கள் தனக்கு மரியாதை தந்து, தன்னை உள்ளே விட்டதாக குஞ்சு நினைத்துக் கொண்டது.

அடடா இவ்வளவு மரியாதை எனக்குக் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் முதலிலேயே அரண்மனைக்கு வந்திருக்கலாம்! என்று தனக்குள் கூறிக் கொண்டது.

அரண்மனையில் வேலைக்காரர்கள் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தார்கள். எல்லோரும் வேலையில் மும்முரமாய் இருந்ததனால் யாரும் இந்தச் சிறிய குஞ்சைக் கவனிக்கவில்லை.

சமையலறையிலிருந்து அரண்மனைச் சமையல்காரன் வெளியே வந்தான். அவனைக் கண்ட கோழிக்குஞ்சு இவர்தான் அரசனாயிருக்க வேண்டும் என்று தவறாக நினைத்து "ஐயா நான் தொலை தூரத்திலிருந்து வருகின்றேன். எனது பெயர் நொண்டிக்குஞ்சு, நான் உங்களிடம் என் குறையைக் கூறி அரண்மனையில் தங்கலாம் என்று வந்திருக்கின்றேன்" என்றது.

இதைக் கேட்ட சமையல்காரன் இடி இடி யென்று சிரித்தான். "பலே பலே உனக்கு அரண் மனையில் இடம்தானே வேண்டும், வா! வா! அரண்மனைச் சட்டிக்குள் உனக்கு இடம் காலி யாகத்தான் இருக்கிறது" என்று கூறி அதைப் பிடித்துக் கொண்டு சென்றான். குஞ்சு மகிழ்ந்தது. தான் வந்தவேலை நிறைவேறிவிட்டதாக நினைத்துக் கொண்டது பேதைக் குஞ்சு.

சமையல்காரன் ஆவி பறந்த வெந்நீரில் கோழியைப் போட்டான். குஞ்சு துடிதுடித்தது. நெருப்பிடம் இறைஞ்சியது. 'நெருப்பே! எனக்கு உடம்பு எரிகின்றது. நீ எரியாதே' என்றது. அதற்கு நெருப்பு 'உனக்கு ஞாபகமிருக்கின்றதா? எனக்கு உதவி செய்யாத உனக்கு நான் உதவி செய்ய மாட்டேன்' என்று கூறிப் பெரிதாக எரிந்தது.

அடுத்து குஞ்சு எரியும் விறகிடம் "நீயாவது எரியாமல் இரு" என்றது. விறகோ 'நான் மரமாக இருந்து உன்னிடம் உதவி கேட்டபோது என்ன சொன்னாய்.... நான் உனக்கு உதவி செய்ய மாட்டேன்' என்று கூறி நன்றாக எரிந்தது.

அடுத்து நீரிடம் "நீரே நீயாவது குளிர்மை யைத் தாவன்" என்றது குஞ்சு. அதற்கு நீர் 'நீ வரும் போது குப்பை கூழங்களை அகற்றி எனக்கு உதவி செய்யச் சொன்னேன், என்ன சொன்னாய், நேரமில்லை என்று தானே. இப்போது உனக்கு நான் எப்படி உதவி செய்வது? முடியாது' என்று மறுத்து விட்டது. ஒன்றும் உதவி செய்யாத காரணத்தால் குஞ்சு துடிதுடித்து இறந்தது.

தாய் சொல்லைக் கேட்டு நடக்காத குஞ்சு இறுதியில் பரிதாபமாய் இறந்து விட்டது.

(படித்துச் சுவைத்தது)

**Z.N. நிரோஷன்**
'கிறிஸ்தவ சேவை ஆச்சிரமம்'
கிரான்.

## நல் வாழ்வுக்கு சிறந்த விதிகள்



1) இன்றே செய்யக் கூடிய செயலை நாளை வரை தள்ளிப்போட வேண்டாம்.
2) நீங்களே செய்யக்கூடிய வேலைக்கு மற்றவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.
3) உங்கள் கையில் பணம் கிடைக்கு முன்னரே அதனைச் செலவழிக்க வேண்டாம்.
4) விலை மலிவாக இருக்கிறதே என்பதற்காக உங்களுக்குத் தேவையில்லாத பொருட்களை வாங்கவேண்டாம். அது என்றைக்குமே உங்களுக்குப் பிரியமானதாக இருக்காது.
5) பசி, தாகம், குளிரைவிட மோசமானது ஆணவம்.
6) குறைவாகச் சாப்பிட்டதற்காக என்றுமே வருந்த வேண்டாம்.
7) நாம் விரும்பிச் செய்யும் எச்செயலுமே சிரமமானது அன்று.
8) என்றுமே நடந்திராத சில தீயவைகள் உங்களுக்குத் துன்பம் தருவதை அனுமதியாதீர்கள்.
9) எப்பொழுதுமே பொருட்களை இலகுவான அதன் கைப்பிடி கொண்டு தூக்குங்கள்
10) கோபம் வந்தால் பேசுவதற்கு முன் 10 எண்ணுங்கள்:
அதிக கோபம் வந்தால் நூறு எண்ணுங்கள்.

- அமெரிக்க ஜனாதிபதி தோமஸ் ஜெபர்சன் பின்பற்றிய விதிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிள்ளைகளுக்கு மட்டும்**

முடிவுத்திகதி
**30 / 09 - 2004**




# விவிலியம் கற்போம் - 34

## கல்மழை

*(விடுதலைப் பயணம் - 9:13-26)*

**(பொருத்மான சொற்களால் இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் பின்வருமாறு கூறினார். 'அதிகாலையில் எழுந்து பார்வோன் முன்னிலையில் நின்று அவனை நோக்கிச் சொல்: எபிரேயரின் கடவுளாகிய ஆண்டவர் சொல்லுவது இதுவே. எனக்கு வழிபாடு செய்வதற்காக மக்களைப் போக விடாத அளவுக்கு இன்னும் தலைதூக்கி நிற்கின்றாய். எகிப்து நிறுவப்பட்டது தொடங்கி, இன்றுவரை ..............................இருந்திராத அளவுக்கு மிகக் கொடிய கல் மழையை ..............................நாளைய தினம் இந்நேரத்தில் பெய்யச் செய்வேன். எனவே, உன் கால்நடைகளையும் வயல்வெளியில் உனக்குரிய எல்லாவற்றையும் பாதுகாப்பான இடத்தில் தஞ்சம் புகச் செய்ய..............................அனுப்பி விடு. வீட்டிற்குக் கொண்டு சேர்க்கப்படாமல் ..............................விடப்படும் மனிதர் அனைவர் மேலும் விலங்குகள் மேலும் கல் மழை பெய்ய எல்லோரும் மடிவர்' என்றார்.

ஆண்டவர் மோசேயை நோக்கி, 'எகிப்து நாடெங்கும் மனிதர், விலங்கு,வயல் வெளியிலுள்ள பயிர்பச்சை இவற்றின் மேல் கல்மழை பொழியுமாறு உன் கையை ..............................நீட்டு'. என்றார். மோசே தம் கோலை நீட்டவே, ஆண்டவர், இடி முழக்கங்களையும், கல் மழையையும் அனுப்பினார். ..............................நெருப்புப் பாய்ந்து வந்தது. எகிப்து நாடெங்கும் கல்மழை பெய்வித்தார் ஆண்டவர். ஒரு நாடாக எகிப்து உருவான காலம் தொடங்கி அந்நாள்வரை அங்கு இருந்திராத அளவு மிகக் கடுமையான கல்மழை பெய்ய ..............................மின்னல் வெட்டிக் கொண்டிருந்தது. இஸ்ராயேல் மக்கள் தங்கியிருந்த ..............................நிலப்பகுதியில் கல்மழை பெய்யவில்லை.

**விடைகள்: வானோக்கி, கோசேன், வந்து, வயல்வெளியில், அதனிடையே, அங்கே, நிலத்தில், இப்போதே, அதில், என்.**

***(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும் பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவுவை வளர்ப்போம்-34

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. அண்மையில் தமிழ் நாட்டில் தீவிபத்தில் குழந்தைகள் கருகிப் போன கோரம் நடைபெற்ற இடம்
   (மதுரை, கும்பகோணம், தஞ்சாவூர்)

2. சித்த மருத்துவத்தில் 'தமரகம்' என்று அழைக்கப்படுவது
   (இதயம், இரைப்பை, ஈரல்)

3. இவ்வாண்டு ஆசியக் கிண்ண கிரிக்கட் சுற்றுப் போட்டித் தொடரில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெற்றவர்.
   (மஹேல ஜெயவர்த்தனா, மாவன் அத்தபத்து, சனத் ஜெயசூரியா)

4. இரக்கம் போனாலும்...
   (இரவில் போ, சிறக்கப் போ, மதிக்கப் போ)

5. இது சிறுத்தாலும் காரம் போகாதாம்
   (மிளகு, திப்பிலி, கடுகு)

6. வித்தியாசமான கதைக் கருவைக் கொண்ட 'பிதாமகன்' திரைப்படத்தின் இயக்குனர்
   (மணிரத்தினம், பாலா, தங்கர் பச்சன்)

பெயர் : ....................................................................................

....................................................................................

....................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்-34
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவிலியம் கற்போம் - 31

நான், நைல், அடுப்புகளிலும், அனைவர், எகிப்து,
நானே, ஆற்றில், நோக்கி

## அறிவை வளர்ப்போம் - 31

1) வட்டவளை
2) பஞ்சாப்
3) ஷியாம்மா சாஸ்திரி
4) மாவன் அத்தப்பத்து
5) கல்லீரல்
6) சீனா

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து
நூறு ரூபா பரிசு பெறுவோர்.

**கி. ரொஷான் சில்வெஸ்டர்**
புனித அந்தோனியார் ஆலயம்
சீனக்குடா, திருகோணமலை.

**கி. பவித்ரா**
இல.70, 3ம் குறுக்குத் தெரு
மட்டக்களப்பு.

ஒரு போட்டிக்கு மட்டும் சரியான விடை அளித்து
ஐம்பது ரூபா பரிசு பெறுவோர்.

**நான்சி அல்பெட் கிறீஸ்டியன்**
26, வேளாங்கண்ணி வீதி,
பாலையூற்று, திருகோணமலை.

**C. ஜோன்**
இல. 33 பிரதான வீதி
கல்முனை.

பாராட்டுப் பெறுவோர்

**டெம்ஸ்டன் செலர்**
353 பிரதான வீதி,
வாழைச்சேனை.

**ரங்கன் சுலக்ஷினி**
சந்தை வீதி,
செங்கலடி.

போட்டியில் பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.
(ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்து வரும் .....

**இலங்கை வானொலி தேசிய சேவையில்**
**கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்**
**செப்டம்பர் - 2004**

***செப்டம்பர் – 2004***

கத்தோலிக்க நற்சிந்தனைகள்
– நாள்: 18, 19, 20, 21, 22, 23, 24
– நேரம்: காலை 5.50 மணி

புதிய உலகம் வளர்ந்தோர் நிகழ்ச்சி
– நாள்: 26
– நேரம்: மாலை 5.30 மணி

சிறுவர் உலகம்
– நாள்: 28
– நேரம்: இரவு 9.30 மணி

***ஒக்டோபர் – 2004***

கத்தோலிக்க நற்சிந்தனைகள்
– நாள்: 02, 03, 04, 05, 06, 07, 08.
– நேரம் காலை 5.50 மணி

புதிய உலகம் - வளர்ந்தோர் நிகழ்ச்சி
– நாள்: 10, 24.
– நேரம்: மாலை 5.30 மணி

சிறுவர் உலகம்
– நாள்: 12, 26
– நேரம்: இரவு 8.30 மணி

---

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*

தொகுப்பு: சமூகத்தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org